# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=

இதழ் - 84

17.11.2024


# முயற்சியின் உதாரணம் – எலான் மஸ்க்.






எங்கட வாழ்வியல்

08



இலங்கையில் வரி ஏய்ப்பைக் கட்டுப்படுத்த வங்கி வெளிப்படைத்தன்மையைப் பயன்படுத்துதல்..

10



சோளம் பயிரிடுதல் பற்றிய ஒரு பார்வை

14



திறனுறு கல்வி

18


பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்

# முயற்சியின் உதாரணம் –எலான் மஸ்க்.

**சிலர் ஐடியாக்களை மட்டும் சொல்லுவார்கள். ஆனால் எலான் மஸ்க் ஐடியாக்களை சொல்லுவார், அதனை செயல்படுத்த மிகப்பெரிய அளவில் முதலீடும் செய்து ஐடியாவை நிறைவேற்ற உழைக்கவும் செய்வார். அதுதான் எலன் மஸ்க் என்ன சொன்னாலும் உலகம் உற்று கவனிப்பதற்கு முக்கிய காரணம். அவரின் மற்றுமொரு சிந்தனை தான் ஹைப்பர்லூப்.**

தொகுப்பு: ஆத்மிகா ஞானரூபன்
யாழ் /சுண்டுக்குளி மகளிர் கல்லூரி




ஒரு தொழில் முனைவராக மட்டுமல்லாது எலன் மஸ்க் உண்மையிலேயே 21-ம் நூற்றாண்டின் சிறந்த அறிவியல் சிந்தனையாளாரக. எதிர்காலத்தில் மனிதர்களுக்கு எது பயன்படும் என்பதை அறிந்து தனது சொந்தப்பணத்தையே முதலீடாக போட்டு அரசுக்கு நிகராக தனி சாம்ராஜ்யம் நடத்திக்கொண்டு இருக்கிறார்.

எண்ணூறு கோடி பேர் இருக்கக்கூடிய இந்த மனிதக் கூட்டத்திற்கு மத்தியில் ஒரு சிலருடைய சிந்தனையும், உழைப்பையும் பார்த்து மொத்த உலகமே உற்று கவனித்த தருணங்கள் ஏராளம். அப்படி இன்றைய மனித சமுதாயத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திய ஒரு முக்கிய நபரை பற்றிதான் இந்த கட்டுரையில் பார்க்க போறோம் மக்களே! இவையெல்லாம் நடைமுறைக்கு சாத்தியமா என கேள்வி எழுப்பும் தருணத்தில், தனது சிந்தனையின் மீது மிகப்பெரிய அளவில் முதலீடும், அதீத உழைப்பையும் கொடுத்து வெற்றி பெறச் செய்வார். அவர் தான் எலான் மஸ்க் எனும் ஒன் மேன் ஆர்மி.

உலகின் டாப் பணக்காரரர் ஆகத்திகழும் எலான் மஸ்கின் முதல் தொழில் என்று பார்த்தால் அவர் உருவாக்கிய Blaster எனும் சூட்டிங் கேமை 500 டாலருக்கு விற்றதுதான். அந்த உத்வேகமே இன்று SpaceX, Tesla, NeuraLink, PayPal, SolarCity, OpenAI, Zip2 Corporation, Tesla Energy போன்ற மிகப்பெரும் நிறுவனங்களாக உருவெடுத்திருக்கிறது. இந்த மாபெரும் வெற்றிக்கு பின் அதிக கடின உழைப்பும், வேதனைகளும் நிரம்பி இருக்கிறது. அப்படி இவ்வளவு சாதனைகள் புரிய அவர் சிறு வயதில் செய்த விசயங்கள் என்ன? எலான் மஸ்க் பில்லியனர் ஆனது எப்போது? கனவுகளை நோக்கி அவர் எவ்வாறு பறந்தார்? என்பதை பார்ப்போம். எலான் மஸ்க் ஜுன் 28, 1971 ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவில் உள்ள பிரிட்டோரியா பகுதியில் பிறந்தார். தந்தையின் தொடர் குடிப்பழக்கம், தாய் தந்தையர் விவகாரத்து என சிறுவயதிலேயே பல கஷ்டங்களை பார்த்திருக்கிறார். சிறுவயதில் அவருக்கு அதிக நண்பர்கள் இல்லாததால். இவருக்கு நண்பனாய் இருந்தது புத்தகங்களே. இதனால் சிறுவயதிலேயே அதிகம் புத்தகங்களை படிக்கும் திறன்மிக்கவராக இருந்துள்ளார் எலான் மஸ்க். பிறகு கனடாவில் குவின்ஸ் பல்கலைகழகத்திலும், பென்சில்வேனியா பல்கலைகழகத்திலும் இளங்கலை படிப்பை முடித்தார். மனிதர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகும் கண்டுபிடுப்புகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என முடிவெடுத்தார் எலான் மஸ்க். அப்படி அவர் தேர்ந்தெடுத்த துறைகள் தான் இணையம் (Internet), புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்கள் (renewable energy sources), விண்வெளி குடியேற்றம் (space colonization). அதனின் முதல் படியாய் 1995ல் Zip2 Corporation எனும் ஐடி நிறுவனத்தை துவங்குகிறார். அதிகாலையில் வேலையை துவங்கினால் மாலை வரை கடுமையாக உழைக்கும் பேர்வழி தான் எலன் மஸ்க். இருப்பினும் தொடங்கிய சில வருடங்களிலே புகழ்பெற்ற யுடவயஎளைவய எனும் சர்ச் என்ஜின் நிறுவனம், $307 மில்லியன் கொடுத்து இவரது நிறுவனத்தை வாங்கியது. பிறகு அதே வருடமே X.com என்னும் எலெக்ட்ரானிக் பணம் செலுத்தும் முறையிலான நிறுவனத்தை துவங்கினார்.பின்னாளில் அந்நிறுவனத்திற்கு ீயலியட என பெயர் மாற்றம் செய்யப்பட்டு சேர்மன் ஆகவும் உயர்ந்தார் எலான் மஸ்க்.


2002இல் Paypal நிறுவனத்தை நடியல 1.5 பில்லியன் டாலருக்கு வாங்கியது. எலான் மஸ்கின் பங்காக 180 மில்லியன் டாலர் கிடைத்தது. இதில், 100 மில்லியன் டாலரை SpaceX நிறுவனத்திலும், 70 மில்லியன் டாலரை டெஸ்லா நிறுவனத்திலும், மீதமுள்ள 10 மில்லியன் டாலரை சோலார் சிட்டி என்ற நிறுவனத்திலும் முதலீடு செய்தார். உலகை மாற்றும் கண்டுபிடிப்புகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வதில் ஒரு போதும் தயங்கியதில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம். செவ்வாயில் மனிதர்களை குடியேற்றம் செய்ய வேண்டும் என்பது அவரது முக்கிய கனவாக இருந்தது. அதன்படி, 2002 இல் Space X என்னும் நிறுவனத்தை நிறுவினார் எலான் மஸ்க். விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபடும் முதல் தனியார் நிறுவனமாய் Space X இருந்தது. 2003 ஆம் ஆண்டு மின்சாரம் மூலமாக இயங்கக்கூடிய காரினை வடிவமைக்கும் முதல் பெருமைக்குரிய Tesla என்னும் நிறுவனத்தைத் தொடங்குகிறார். 2006 இல் சோலார் சிட்டி என்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தரக்கூடிய (renewable energy sources) நிறுவனத்தையும் நிறுவுகிறார். ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா,



சோலார் சிட்டி என மூன்று வேகமான குதிரைகளில் ஒரே சமயத்தில் பயணம் செய்தவர் எலான் மஸ்க். இதனால் மொத்தமாகக் கைவசம் இருந்த அனைத்தையும் இழக்கும் சூழல் கூட உருவானது. ' 2008ஆம் ஆண்டு டெஸ்லா திவாலாகும் நிலை ஏற்பட்டது. தனது சொந்த பணத்தை முதலீடு செய்து CEO-வாக பதவியேற்றுக்கொண்டார். இதனிடையே Space X நிறுவனத்தின் ராக்கெட்கள் விண்ணிற்கு செலுத்துவதில் பல தோல்விகளைக் கண்டதால், அவர் நிறைய கடனுக்குள்ளானார். இதன் காரணமாக அவர் மனைவி அவரை விவாகரத்து செய்தார். அன்றைய காலகட்டத்தில் நிறைய தோல்விளை சந்தித்த நபராக மஸ்க் இருந்தார். 2008 ஆம் ஆண்டு எனக்கு மிகவும் மோசமான ஆண்டு என ஒரு நேர்காணலில் குறிப்பிட்டிருக்கிறார் எலன் மஸ்க். இந்நிலையில், Space X ன் நான்காவது முயற்சியில் Falcon 1 வெற்றிகரமாக புவி சுற்றுவட்டபாதையை அடைந்தது. இந்த வெற்றிக்கு பிறகு NASA உடன் கூ1.6 பில்லியன் மதிப்பிலான ஒப்பந்தத்தை SpaceX போடுகிறது. அதன் பின்னர், அரசின் உதவி இன்றியே வெற்றிகரமாக பல ராக்கெட் என்ஜின்களை வடிமைத்தது SpaceX. அதேபோல், வுநளடய நிறுவனத்தின் Tesla Model S கார் நன்கு விற்பனையாகி பொருளாதார ரீதியாக பெரும்வெற்றியை பெற்றுதந்தது. இன்று பணக்காரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்திருக்கிறார் என்றால் அதற்கு முக்கிய காரணம் டெஸ்லாதான். டெஸ்லாவின் இன்றைய சந்தை மதிப்பு சுமார் 650 பில்லியன் டாலர் ஆகும்.

சிலர் ஐடியாக்களை மட்டும் சொல்லுவார்கள். ஆனால் எலான் மஸ்க் ஐடியாக்களை சொல்லுவார், அதனை செயல்படுத்த மிகப்பெரிய அளவில் முதலீடும் செய்து ஐடியாவை நிறைவேற்ற உழைக்கவும் செய்வார். அதுதான் எலன் மஸ்க்என்ன சொன்னாலும் உலகம் உற்று கவனிப்பதற்கு முக்கியக் காரணம். அவரின் மற்றுமொரு சிந்தனை தான் ஹைப்பர்லூப். போக்குவரத்துத்துறையின் அடுத்த பெரிய விஷயமாகப் பார்க்கப்படும் ஹைப்பர்லூப் டெக்னாலஜியை கொண்டு வந்தால் ஒரு மணி நேரத்தில் 1200 கிலோ மீட்டர் பயணிக்க முடியும். இதற்கான ஆராய்ச்சிகளும், திட்டங்களும் செயல்புரிந்து வருகின்றனர். அதேபோல், மூளையிலிருந்து நேரடியாகச் சாதனங்களைக் கட்டுப்படுத்தும் கனவுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நியூராலிங்க் இவர் போட்ட விதைதான். இதற்காக நேரசயடுமை என்னும் ஆராய்ச்சி நிறுவனம் மூலம் ஆராய்ச்சிகளும் நடந்து வருகின்றன.

இவ்வாறு ஒரு தொழில்முனைவராக மட்டுமல்லாது எலான் மஸ்க் உண்மையிலேயே 21ஆம்நூற்றாண்டின் சிறந்த அறிவியல் சிந்தனையாளராகவும் விளங்குகின்றார் அதற்கு மிக முக்கியக் காரணம், புதிய சிந்தனைகள் மட்டுமே அல்ல. எதிர்காலத்தில் மனிதர்களுக்கு எது பயன்படும் என்பதை அறிந்து, தனது சொந்தப்பணத்தையே முதலீடாக போட்டு அரசுக்கு நிகராக தனி சாம்ராஜ்யம் நடத்திக்கொண்டு இருக்கிறார். எலான் மஸ்க் தான் 'நிஜ அயர்ன் மேன்' என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். இன்றைய இளைஞர்கள் பாராட்டி பின்பற்றவேண்டிய மனிதர்களுள் ஒருவர் எலான் மஸ்க்.



**மின்மடல்** : tamilseconomy@gmail.com
**தொலைபேசி** : 0777304010 / 0702675575

## ச(ம)னங்கள் மாறுமா?

2024 இலங்கை அரசியல் மாற்றம் பொருளாதாரத்தின் மீட்சி மற்றும் வளர்ச்சிக்கான ஒரு முக்கிய மையமாகக் கருதப்படுகிறது. நாட்டின் தற்போதைய பொருளாதார சூழல் மற்றும் அரசியல் நிலைமையை பொருத்தவரை, இது பொருளாதார முயற்சியை முன்னெடுக்க முக்கியமான சந்தர்ப்பமாக விளங்குகிறது.

புதிய அரசாங்கம், IMF மற்றும் பிற சர்வதேச அமைப்புகளின் உதவிகளை பயன்படுத்தி புதிய பொருளாதார கொள்கைகளை உருவாக்க கூடுதலான வாய்ப்பு உள்ளதோடு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் திட்டங்கள், தேசிய வருவாயினை உயர்த்தும் நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்பு சந்தையை மேம்படுத்தும் முயற்சிகள் என்பன முக்கியமானவை என்று கருதப்படுகிறது.

இலங்கையின் முக்கியமான பிரச்னையாக இருக்கும் உள்கட்டமைப்பு மேம்பாடு பொருளாதாரத்தை மீண்டும் செயல்படச் செய்ய உதவும். அத்தியாவசிய பொருட்களின் உற்பத்தி மற்றும் விலையுயர்வைக் குறைக்கும் நடவடிக்கைகள் முன்னிலைப்படுத்தப்படுவதும் சர்வதேச கடன் பிரச்சனைகளை சமாளிக்க, புதிய ஆட்சியாளர்கள் கடன் மறுசீரமைப்பு மற்றும் வெளிநாட்டு வியாபார ஒப்பந்தங்களில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதும் மக்களுக்கு நம்பகத்தன்மயை அதிகரிக்கும் செயற்பாடுகளாக அமையும் என்று நம்பப்படுகிறது

சமீபத்திய தேர்தல் தோல்விகள், குறிப்பாக தமிழ் கட்சிகளின் அரசியல் ஆதிக்கத்தில் ஏற்பட்ட குறைவு, பல காரணங்களால் விளக்கப்படலாம் நம்பிக்கையற்ற அரசியல்: பொதுமக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத அரசியல் நேர்மையின்மையும் செயலற்ற தன்மையும் தமிழர் வாக்காளர்களின் நம்பிக்கையை குறைத்திருக்கலாம். தமிழ் தேசியத்தைக் கொண்டு வளர்ச்சி, வேலை வாய்ப்பு, அல்லது பொருளாதார முன்னேற்றத்தை உறுதிப்படுத்த முடியாத நிலை காரணமாக, மக்கள் மாற்றங்களை விரும்பியிருக்கலாம். மக்களுடைய மனங்கள் மாறிவிட்டன என்று தடுமாறுவதை விடுத்து அரசியல்வாதிகளுடைய மனங்களில் மாற்றங்கள் ஏற்படுமா சனங்களுக்காக அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்ற கேள்வியை தொக்கி நிற்கிறது.

இன்றைய இளைய தலைமுறை முந்தைய தலைமுறைகளின் தேசிய ஆவேசங்களை விட அதிகம் எதிர்கால வளர்ச்சி மற்றும் திறம்பட நிர்வாகத்தை நாடுகின்றனர். இளம் வாக்காளர்கள் தமிழ் தேசியத்தின் பாரம்பரிய அடிப்படைகளைப் பதிலாக புதிய கொள்கை முறைமை மற்றும் சர்வதேச தரத்திலான முன்னேற்றங்களை விரும்புகிறார்கள் என்பதோடு இனிவரும் காலத்தில் கைகூடும் வகையில், பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக சமநிலையை ஆதரிக்கத்தக்க புதிய வகை அரசியலுக்கு மக்கள் ஆதரவளிக்க ஆரம்பித்துள்ளனர்.

ஆகவே மக்களின் எதிர்பார்ப்புக்கு அவர்களின் அடிப்படை சேவைகளுக்கு இணக்கமான அரசியலை செய்பவர்களுக்கு எப்போதும் மக்கள் கரம் கொடுப்பார்கள் என்பது இப்போது தெளிவாக இருக்கிறது மக்கள் வழிபடைந்து விட்டார்கள் ஆகவே வருகின்ற உள்ளூராட்சி தேர்தலில் எவ்வகையான மாற்றங்கள் ஏற்படும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# இலங்கையின் பொருளாதாரம் நிலைப்படுத்தப்பட்டு ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் முதலீடுகளை கவர்வதற்கும் தொடர்ச்சியான மறுசீரமைப்புகள் அவசியம் -உலக மத்திய வங்கி




பொருளாதாரம் நிலைப்படுத்தப் பட்டுள்ளது, 2024 இல் பொருளாதார வளர்ச்சியானது 4.4 சதவீதத்தை அடையும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், முன்னைய எதிர்வுகூறல்களை இது விஞ்சிவிட்டது. முக்கிய கட்டமைப்பு மற்றும் கொள்கை மறுசீரமைப்புகள் ஆகியவற்றின் உதவியின் பிரகாரம்கைத்தொழில் மற்றும் சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக நான்கு காலாண்டு காலப் பகுதியில் இந்த சாதகத் தோற்றப்பாடு தொடர்ந்துள்ளது என உலக வங்கி தெரிவிக்கிறது.

வியாபாரம் மூலம் உயர்வான மற்றும் நிலைபேறான வளர்ச்சியை அடைவதற்கான ஆற்றல்கள் நாட்டில் காணப்படுகின்றன என இவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வருடாந்தம் 10 பில்லியன் டொலர் மதிப்பிடப்பட்ட பயன்படுத்தப்படாத ஏற்றுமதி சார் ஆற்றல்கள் இலங்கையிடம் காணப்படுகின்றன, இதன் மூலம் சுமார் 142,500 புதிய தொழில்களை உருவாக்கலாம். அவசியமான மறுசீரமைப்புகள் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் உற்பத்தித் துறை, சேவைகள், விவசாயம் ஆகியவற்றில் பல்வகையில் ஏற்றுமதிகளை விரிவாக்கம் செய்வதற்கான காத்திரமான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இலங்கையானது அதனது உண்மையான ஏற்றுமதி ஆற்றல்களை உணர்வதற்கான வாய்ப்புள்ளது. இது வருடாந்தம் 10 பில்லியன் டொலர்கள் என நாம் மதிப்பிட்டுள்ளோம். பூகோள பெறுமதி சந்தையில் தனது பங்குபற்றுதலை மேலும் காத்திரமாக மேற்கொள்வதற்கான வாய்ப்பு இலங்கைக்கு காணப்படுகின்றது, மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கி வளர்ச்சியில் நிலைபெறுவதற்கு புவியியல் தோற்றப்பாட்டின் சாதகப் பயன்பாடுகளைப் பயன்படுத்தி வளர்ந்து வரும் பூகோள தோற்றப்பாட்டில் நன்மையை பெற்றுக் கொள்ள முடியும். முக்கியமான பொருளாதார மற்றும் ஆளுகை சார்ந்த மறுசீரமைப்புகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த தருணத்திலிருந்து முழுமையான நன்மைகளை இலங்கை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.".

2025 இல் 3.5 சதவீத மிதமான வளர்ச்சி ஏற்படலாம் என இவ்வறிக்கையில் எதிர்கூறப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் வடுக்கள் காரணமாக மத்திய காலப் பகுதியினுள் மிதமான வழியில் வளர்ச்சி ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. . வறுமையானது படிப்படியாக குறைவடையும் என எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும் கூட 2026 ஆம் ஆண்டு வரையில் 20 சதவீதத்திற்கும் அதிகமாகக் காணப்படலாம். 2024 இல் மத்திய வங்கியின் இலக்கான 5 சதவீதத்தை விட குறைவாக பணவீக்கம் காணப்பட்டு பின் கேள்விகள் அதிகரிக்கின்ற பொழுது படிப்படியாக அதிகரிக்கும். சுற்றுலாத் துறை மற்றும் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புதல் ஆகியவற்றின் காரணமாக 2024 ஆம் ஆண்டில் நடப்பு கணக்கானது மிகையாக காணப்படலாம் என எதிர்கூறப்பட்டுள்ளது.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,04,850 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,23,450 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** தற்போதுள்ள இலங்கையின் அரசியல்நிலவரம்பொருளாதார மாற்றத்தை கொண்டு வருமா?

**பதில் -** இலங்கையின் தற்போதைய அரசியல்நிலைமை பொருளாதாரத்தை கட்டி எழுப்ப சில சவால்களை உருவாக்குகிறது. 2022ல் ஏற்பட்ட நிதி நெருக்கடியால், இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டது. அதன் பின்னர் சில உடன்பாடுகளின் மூலம் சர்வதேச நிதியுதவிகள் கிடைத்தபோதிலும், அரசியல் நிலைத்தன்மை இன்னும் மறுசீரமைப்பிற்குள் உள்ளது. அரசியல் நிலைமை தொடர்ந்து நிலைத்தன்மையாக்கப்படாதவரை, வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் நம்பகத்தன்மை குறைகின்றன. இதனால், பொருளாதாரத்தை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டிய முயற்சிகள் சற்றே மந்தமாகவும் சவாலானதாகவும் இருக்கின்றன. அதற்காக நாட்டில் ஆட்சி, வரி மற்றும் நிதி கொள்கைகள் போன்றவற்றில் திருத்தங்கள் செய்வது, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் அதிகபட்ச மக்கள் நலன்களை முன்னிலைப்படுத்துவது முக்கியமானது.

**திரிசங்கன்**
**வற்றாப்பளை**

**கேள்வி -** இனிவரும் காலங்களில் தற்சார்பு பொருளாதாரத்தை காட்டியமைப்பதில் இலங்கை அரசாங்கம் முனைப்பு காட்டுமா?

**பதில் -** தற்சார்பு பொருளாதாரத்தை (Self-sufficient economy) ஊக்குவிப்பது குறித்து இலங்கை அரசு பல முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக, இறக்குமதி சார்ந்த பொருட்களுக்கான விருப்பத்தை குறைத்தல், உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல், வேளாண்மையை மேம்படுத்துதல் போன்ற பல திட்டங்கள் இதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில், இறக்குமதியால் ஏற்படும் நிதிசிக்கலை தவிர்க்கவும், வலுவான உள்நாட்டு பொருளாதாரத்தை உருவாக்கவும் அரசாங்கம் பல்வேறு நிலைத்திட்டங்களை வடிவமைத்துள்ளது. இவற்றில் முக்கியமாகவேளாண்மை, கைத்தொழில், மற்றும்சேவைகள்உள்ளிட்ட துறைகளில் தற்சார்பை மேம்படுத்துவது அடங்கும். சமீப காலங்களில், கொரோனா வைரஸ்மற்றும்பிற பொருளாதார சவால்கள் காரணமாக தற்சார்பு பொருளாதாரத்தின் அவசியத்தை இலங்கை உணர்ந்தது. எனவே, அடுத்தகாலங்களில் தற்சார்பு பொருளாதாரத்தை இன்னும் அதிகமாக ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கை அரசு பல நடவடிக்கைகளை எடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

**சண்முகநாதன் சபேசன்**

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருணமியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 320/= |
| உருளைக்கிழங்கு | 340/= |
| பச்சை மிளகாய் | 300/= |
| தக்காளி | 380/= |
| மரவள்ளிக்கிழங்கு | 300/= |
| கோவா | 280/= |
| கரட் | 290/= |
| வாழைக்காய் | 260/= |
| சின்ன வெங்காயம் | 300/= |
| பாகற்காய் | 360/= |
| வெண்டிக்காய் | 200/= |
| பயற்றங்காய் | 180/= |
| பீற்றூட் | 220/= |
| முருங்கைக்காய் | 400/= |
| தேங்காய் | 160/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 207/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 313/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர்டொலர் - | 219/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 374/= |
| சுவிஸ் பிராங் - | 331/= |
| அமெரிக்க டொலர் - | 289/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 325/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 227/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 346/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

**விடியக்காலத்தால அப்பதான் பனையால விழுந்த பனங்காய் மாதிரி வீட்டு விறாந்தையில சக்கப்பணிய இருந்த வீட்டம்மா முகநூலிலை வருகிற ஆற்றையும் பதிவை தன்ரை பதிவு மாதிரி போடுற முகநூல் எழுத்தர் மாதிரி ஒரு கொப்பியிலை இருந்த என்னத்தையோ இன்னொரு கொப்பியில எழுதிக் கொண்டிருந்தா.**

பக்கத்தில வழக்கம்போல சூமில பராக்குப்பார்த்த படியே பாடம்படிக்கிற சின்னவள் உந்த கொப்பியடிக்கிற பதிவுகளுக்கெல்லாம் வாசிக்காமலே விருப்புப் போடுற நட்புகள் மாதிரி வீட்டம்மான்ரை கொப்பியடிப்பை பார்த்து ரசித்துக்கொண்டு இருந்தாள். உப்பிடி எழுதிக்கொண்டு இருந்த வீட்டம்மா அட சனியனை..நரகத்தி முள்ளே.. நரகாலி... எண்டு கத்தவும் போனைத் தழுவித்தடவிக்கொண்டிருந்த நான் என்னையாக்கும் சொல்லுறா எண்டு திடுக்கிட்டு எட்டிப்பாத்தன்.

பக்கத்தில இருந்த கதிரைக்கு கீழால மாதிரி பார் என்ன விளைச்சல் எண்டா.

வீட்டம்மா இப்பிடி ஏதும் சந்தர்ப்பங்கள் கிடைச்சா கிறெடிற்காட் மாதிரி மக்சிமம் பாவிச்சுப்போடுவா. பிறகு பாத்தா முன்னால போற அட்டைக்குப் பின்னால அத்தியாவசிய சேவையில இணைஞ்ச மண் லொறி மாதிரி இன்னும் ஒரு சிவப்பு அட்டை போய்க்கொண்டு இருந்தது. உந்த மண் லொறி நினைப்பு வரேக்கைதான் எங்கட சனங்கள் உங்க றோட்டு வழிய போகேக்கை வரேக்கை கண்மண் தெரியாம ஓடி அடிபட்டுச் சாகிறதும் அங்கவீனமாய்ப் போகிறதும் ஞாபகம் வந்திச்சு. உந்த ஒரு கறுத்த ஈரலிப்பான அட்டைவாரிவளவில இருந்து வலந்தலை வரை கீரைப் பிடிக்கு விலை கேட்டுப் போறவர் மாதிரி உடம்பை இடம்வலமா நெளிச்ச படி ஊர்ந்து போய்க்கொண்டு இருந்தது.

அப்பாடா வீட்டம்மா அந்த அட்டையைத்தான் திட்டி இருக்கிறா எண்ட பிறகுதான் எனக்கு நெஞ்சுக்கை தண்ணியே வந்திச்சு. அங்கை பார் ஊரடங்கு நேரத்தில மெயின்றோட்டால போனாக் கொறோனாக்குப் பயமெண்டு குறுக்கு றோட்டுகளால கோறோனேவைக் கூட்டிக்கொண்டு போற குறுக்கால போற கோதாரி விழுவார் மாதிரி என்னனண்டு போகுது பார் எண்டவ சும்மா திண்டு திண்டுபோட்டு வேலை வெட்டி ஒண்டும் செய்யாம பேஸ்புக்கில எழுதிறவை வாகனம் ஓடுற கனபேருக்கு நெஞ்சுப் பயமே கிடையாது.

இயமனுக்கு ஏஜன்ட் மாதிரி வீதி ஒழுங்குகள் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுறது வலு குறைவு. அதிலும் மீசை முளைக்க முதலே மோட்டச்சயிக்கிள் ஓட ஆசைப்பட்டு தாய்தேப்பனுக்கு கரைச்சல் குடுத்து வாங்கி முறுக்கிக்கொண்டு போற பெடியள் கடும் ஆபத்தானவங்கள். அவங்கள் தங்களுக்கும் ஆபத்தை விலைக்கு வாங்கி றோட்டால போற வாறவைக்கு அதே ஆபத்தை இலவசமாக் குடுப்பாங்கள்.

உதமாதிரி கொழும்பில ஓடித்திரியிற சாப்பாடு காவியள் இன்னுமொரு விதமான கரைச்சல். அவங்களுக்கு நடந்து போற ஆற்றையும் கவட்டைப் பாத்தா மேம்பாலம் மாதிரித் தெரியுமாக்கும் கிட்ட வந்துதான் வெட்டிக் கொண்டு போவாங்கள் .நான் ஒரு சின்ன மோட்டச்சயிக்கிள் வைச்சிருக்கிறன் அதிலதான் போறது வாறது.

பின்னால வாற ஓட்டோக்காறர் கோண் அடிச்சு ஏன் மாத்தயா நடந்து போகலாந்தானே எண்டுவாங்கள். அவள் சின்னவளைச் சிலவேளை பள்ளிக்கூடம் கூட்டிக்கொண்டு போகேக்கை அப்பா சயிக்கிள்ளை போறவை எல்லாம் விலத்திக்கொண்டு போகினம் ரெண்டாம் பெல் அடிக்கிறதுக்கிடையில எண்டான்னை போகவேணும் எண்டு பின்னால இருந்து சிடுசிடுப்பாள்.

ஆச்சி நெடுகவும் முந்தி ஒரு மனுசனுக்கு வேகத்தை விட விவேகம் தான் முக்கியம் எண்டுவா. ஆச்சி சொன்ன கன விசயங்களை நான் பின்பற்றா விட்டாலும் உந்த வேக விசயத்தில நான் வலு கவனம். இன்னொரு விசயத்தை சொல்ல வேணும் உந்த நடைபாதையில சிவப்பு விளக்கு எரியேக்கை அதுக்குள்ளால நடந்து போறவையாலையும் சனத்துக்கு பெரிய கரைச்சல்.

போன கிழமை உப்பிடித்தான் வெள்ளவத்தையில எங்கட ஆள் ஒருத்தர் வாய்நிறைய வெத்திலையையும் குதப்பிக் கொண்டு ரெலிபோனில ஆ...உவன் ஆறுமத்தான் என்னை என்னனண்டு நினைச்சவன் . என்னத்துக் என்ரை வேலியில குழை வெட்டினவன். ஆரைக்கேட்டு வெட்டினவன்...

அவனுக்கு இப்ப வந்தன் எண்டால் செய்யிற வேலை செய்வன். சுப்பிறீம் கோடு வரையும் போவன் தெரியுமே. உவன் லண்டனில இருக்கிற சின்னவன் உங்க குறானா திரியுது போக வேண்டாம் எண்டத்தில நான் வரேல்லை. இல்லாட்டில் ஆறுமத்தான ஒரு கை பாப்பன் எண்டு வெத்திலைச் சாறை றோட்டில துப்பிப்போட்டு குறுக்கால போக வந்த ஓட்டோக்காறன் ஒருத்தன் பூறுவா எண்டு பேச நீ என்ன ஆறுமத்தான்ரை தம்பியே பூரவோ எண்டிறாய் ஏலுமெண்டால் பூர் பாப்பம் எண்ட படியே நடந்து போனார்.



# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1.வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.

2.சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.

3.கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.

4.ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.

5.நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1.பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

2.இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.

3.அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.

4.திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

5.கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**இன்று கணிசமான ஆசிய நாட்டவர்கள் வெளிநாடுகளில் வசித்தாலும், அவர்களுடைய உணவுப் பழக்கவழக்கம் பன்னாட்டுக் கலாசார மாகி இத்தாலி சைனா போன்ற நாடுகளின் உணவை பீட்சா பர்கர் என ஏற்றாலும், நெல்லரிசிச்சோறு முக்கியமான உணவாக சமைக்கப்படுகிறது. அதேபோல பிட்டு இடியப்பம் தோசை இட்லி என்பனவும் விசேச நாட்களில் அரியதரம் முறுக்கு, பயற்றம்பணியாரம், வாய்ப்பன் என்பன கட்டாயமாகச் சேர்க்கிறார்கள். அவற்றை செய்து விநியோகிப்பதையும் ஒரு குடிசைக் கைத்தொழிலாக செய்யும் பெண்கள் இருக்கிறார்கள் இதனால் தாங்கள் தொலைத்த அந்த நாட்டின் சுவையை அனுபவிக்கிறார்கள். ஆனால் இங்கே?என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.**

# எங்கட வாழ்வியல்

## பார்வை 14



தமிழ்க்கவி



வாழ்க்கை முறை என்று ஒன்றுண்டு. தமிழர்கள் வாழ்வில் மட்டுமல்ல எல்லா இன மக்களிடமும், எல்லா நாட்டினருக்கும் வாழ்க்கை முறை என்று ஒன்று இருக்கிறது. இருந்தது காலப்போக்கில் மனித நாகரீகம் நாடுகாண் பயணங்கள் மூலம் பல நாடுகளையும் பல கலாச்சாரங்களையும் பலபல வாழ்க்கை முறைகளையும் அறிந்து பின்பற்றத் தொடங்கிவிட்டது. என்றாலும், தமிழர்களின் வாழ்க்கைமுறை பெரிதாக மாறவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

வெள்ளைக்காரர்களின் அதாவது மேல்நாட்டவர்களின்அடடா மேல்நாட்டவர்கள் என்றால் உயர்ந்தவர்கள் என நாம் கருதும் ஒரு அசட்டுத்தனமும் இருக்கிறது அல்லவா?. அதாகப்பட்டது பூமி தன்னைத்தானே சுற்றி வரும் போது அதற்கு இருபக்கங்கள் உண்டல்லவா. ஒருபுறம் இருட்டாக மறுபுறம் ஒளியாகும். மீண்டும் அடுத்த பாதிநாளில் இருண்டபக்கம் ஒளியாகவும் ஒளியிருந்த பக்கம் இருட்டாகவும் வரும். இதில் எப்படி மேல் கீழ் என வகுத்தோம். பாதிநாள் நாங்கள் மேலே பாதிநாள் அவர்கள் மேலே. ஆனாலும் நாங்கள் கீழைத்தேசமாகவும் அவர்கள் மேலைத்தேசமாகவும்தான் வகுக்கப்பட்டுள்ளோம். இது சிவத்தப்பிள்ளை அழகு என்கிற மாதிரித்தான். போகட்டும். நாங்கள் மேலே நின்றாலும் கீழே வந்தாலும் எமது நாடு சூடுதான். அவர்களது பகுதி குளிர்தான்.

ஆக இரண்டு நாட்டுக்கும் இடையே உணவுக்கலாச்சாரம் என்ற ஒன்று உண்டு. நாங்கள் நான்காம் வகுப்பு பாலபோதினியில் படித்திருக்கிறோம். ஆசிய நாட்டவர்களின் பிரதான உணவு நெல்லரிசிச் சோறு. மேலை நாட்டவர்களின் பிரதான உணவு கோதுமை. எனவே நாம் வெள்ளையர்களின் பிரதான உணவான கோதுமையை அவர்கள் மூலமாக பெற்று உண்ணப்பழகிக் கொண்டோம். எங்களுடைய பிரதான உணவும் அதுவே. இன்னும் வன்னியிலும் சிங்கள மக்களிடமும் உள்ள உணவுப்பழக்கம் மூன்று வேளையும் சோறு உண்பது காலையில் மாலையில் மத்தியானம் எல்லாம் சோறுதான். பச்சையரிசிச் சோறு. சிலர் நெல்லை அவித்து புழுக்கி புழுங்கல் அரிசியாகவும் உண்பதுண்டு. பின்னாளில் இந்த புழுங்கல் அரிசியில் நெல்லை அவிக்கும்போதே தவிட்டின் சாரம் இறங்கி விடுவதால் அதுவே சத்துமிக்கதாக சிறந்ததாக கூறப்பட்டது.

இன்று கணிசமான ஆசிய நாட்டவர்கள் வெளிநாடுகளில்வசித்தாலும், அவர்களுடைய உணவுப் பழக்கவழக்கம் பன்னாட்டுக் கலாச்சாரமாகி இத்தலி சைனா போன்ற நாடுகளின் உணவை பீட்சா பர்கர் என ஏற்றாலும், நெல்லரிசிச்சோறு முக்கியமான உணவாக சமைக்கப்படுகிறது. அதேபோல பிட்டு இடியப்பம் தோசை இட்லி என்பனவும் விசேட நாட்களில் அரியதரம் முறுக்கு, பயற்றம்பணியாரம், வாய்ப்பன் என்பன கட்டாயமாக சேர்க்கிறார்கள். அவற்றை செய்து விநியோகிப்பதையும் ஒரு குடிசைக் கைத்தொழிலாக செய்யும் பெண்கள்



இருக்கிறார்கள் இதனால் தாங்கள் தொலைத்த அந்த நாட்டின் சுவையை அனுபவிக்கிறார்கள். ஆனால் இங்கே? ஏன்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

அங்குள்ள பெண்கள் தேடும் கலாச்சார பண்புகள் இப்படி இருக்க, அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக முஸ்லீம் மக்களின் பிரதான உணவு பிரியாணி என நாம் படித்த அந்த நிலை மாறி பிரியாணி என்கிற உணவு அனைத்து மக்களினதும் கலாச்சார பண்டிகை சடங்குகள் எல்லாவற்றிலும் நுழைந்து சக்கைப் போடு போடுகிறது. அதிலும் எத்தனை வகைகள் அப்பப்பா. தலப்பாக்கட்டி, செட்டிநாட்டுதந்துாரி, பிரைட்ரைஸ், என்று சொல்லிக் கொண்டே போகலாம். அத்தனை வகைகளிலும் தாவரபோசணை தனியாக இருந்தாலும் கோழி இறைச்சி,, ஆட்டு இறைச்சி, வான்கோழி, தாரா என பெரிய பட்டியலே சேர்ந்து கொள்கிறது.

ஆயினும் வன்னியில் விவசாயிகள் பச்சையரிசிச் சோறும் நெய்யுருக்கிய சுண்டலும், மான்மரை இறைச்சி வற்றலில் கறி பொரியலும், வழுதுணங்காய்ப்பிரட்டலும் வட்டுக்காய் குருவித்தலைப்பாகற்காய் சுண்டங்காய் கண்டங்கத்தரிக்காய் சுண்டலோ கறியோ என கலந்து சமைத்த உணவு வகைகளும் எந்த வீட்டிலும் கிடைக்கும். இப்போது நகர வாடை வீசத் தொடங்கியதால் இது அருகிவிட்டது. என்றாலும் பல வீடுகளில் மூன்று வேளை சோறு நிரந்தரம். யாழ்மாவட்ட மக்களிடம், இரவில் பலகாரம் செய்யும் பழக்கம் வந்தது. அதாவது இரவுக்கு மாச்சாப்பாடு. பிட்டு இடியப்பம், ரொட்டி போன்றவை. புளித்த மா உணவுகளான தோசை இட்லி என்பவை காலை உணவாகும்,

எனது சிறு வயதில் பிழக்கத்தில் இருந்த சாமை தினை, வரகு எனபவையும் கொள்ளு குரக்கன் என்பவையும் சீர்படுத் துவதில் பெரிய கஸ்டத்தை கொடுத்தாலும் சுவையான உணவாக இருத்திருக்கிறன. இந்த தினைக்கும் சாமை காக்கா சோளத்துக்கும் குருவி கலைப்பதில் வாழ்நாள் அலுத்துவிடும். காலப்போக்கில் அரைத்து மாவாகவே கிடைத்த கோதுமை பெண்களின் திறமையான சமையல் கண்டுபிடிப்புகளால் இவற்றைத் தோற்கடித்து இல்லாமலாக்கிவிட்டது. உழுந்து, பயறு, எள், கௌபீ என்பன பெருமளவு நிலைத்ததற்கு காரணம், அவை கோதுமையுடன் தங்களை இணைத்துக் கொண்டு பயன்பாட்டுக்கு வந்ததுதான்.

குரக்கன் வரகு என்பன போலவே சில காட்டுக்கறிகள் அருமையான மருத்துவ குணங்களை கொண்டிருந்தது என்பது எமக்கு அப்போது தெரியாது. வயலுக்குப் போனால் வரப்புகளில் வளர்த்திருக்கும் பொன்னாங்கண்ணி, நீர் தப்பலில் வளரும் ஆரைக்கீரை, கொஞ்சம் மோட்டை நீரில் பூத்திருக்கும் ஓலுவின் தண்டு, காட்டுப்புதர்களில் படர்ந்திருக்கும் அல்லைப்பூ, பிரண்டையில் தளிர்த்தண்டுகள், கானாந்தி சாத்தாவாரி அப்பப்பா! எத்தனை வகையான கறிப் பொருட்களை சேகரித்து வந்து சமைப்போம். அத்தனையும் இரும்பாகி எம்மை அரண் செய்தது. இன்றும் வயல்களில் அவற்றை காண்கிறோம். ஆனால் பறித்து வந்து உண்ண மனம் ஒப்பவில்லை. அவற்றில் கிருமிநாசினிப்போத்தல்கள் கழுவி ஊற்றப்பட்டிருக்கலாம். சிறுநீர் கழிக்கப்பட்டிருக்கலாம்,

வேறுவகையிலும் அசுத்தமாகியிருக்கலாம். என்ற அச்சமே மிகுதியாகிறது. இவற்றை நாம் மனதார சுத்தமாக பேணியிருந்தால் அது எமது உணவுச் செலவில் ஒரு பகுதியை குறைத்திருக்கும். பிரண்டை, மொசுமொசுக்கை, முடக்கத்தான், குறிஞ்சா, சங்கு பக்ஷ்பம் தூதுவளை வல்லாரை என்பவற்றை தூய்மையான ஒரு இடம் ஒதுக்கி அதில் வளர்த்தே பயன்படுத்தினாலும், காடுகளில் வளர்வது போல அவை மகிழ்ச்சியாக வளரவில்லை. கோடைவர மறைந்து போகிறது. மாரிவர துளிர் விடுகிறது கிணற்றுத்தண்ணி அதற்கு ஒவ்வாமையை கொண்டு வருகிறது.

இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நான் தேடுவது உணவுகளாக கிடைக்கும் மருந்துகளே சாதாரணமாக மேலைத் தேசத்தில் வசிக்கும் ஒருவர் தனது உடல் உபாதைகளுக்கு மருந்தை தேடி அலைய வேண்டியதில்லை. இலங்கையில் அதுவும் எமது பிரதேசத்தில் கிடைக்காத மருந்துச்சரக்குகள் அங்கே சாதாரணமான மாதிரிக் கடைகளிலேயே கிடைக்கிறன. உணவு வகைகளிலும் நாம் சாதாரணமாக பெற்றுக்கொள்ள திணறும் சில வகை கீரைகளை நான் அங்கே பொதுவாக சாதாரண கடைகளில் பார்த்தேன். ஆயினும் என்ன, அவை ஏதோ ஒரு இராசாயன மாற்றத்தை பெற்றிருக்கிறன என்பதே மெய். பலநாட்கள் பொதிசெய்யப்பட்டுக்கிடக்கும் முருங்கையிலை ஒன்று கூட உதிராமல் பொதியுள் கிடக்கும் பெரிய அதிசயத்தை அங்கு கண்டேன்.

# இலங்கையில் வரி ஏய்ப்பைக் கட்டுப்படுத்த வங்கி வெளிப்படைத்தன்மையைப் பயன்படுத்துதல்..




**இலங்கையைப் பொறுத்தவரை, வரி அதிகாரிகள் வங்கிகளுடன் ஒத்துழைக்கும் முறையை நடைமுறைப்படுத்துவது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். வங்கிப் பதிவுகளுக்கான அணுகல்நிதி நடவடிக்கைகளின்தெளிவான தடத்தை வழங்கலாம். வரி ஏய்ப்பு செய்யும் தனிநபர்கள் மற்றும் வணிகங்களைக் கண்டறிய இது பெரிதும் உதவுகின்றது. இருப்பினும் நிச்சயமாக இந்த முறைமையினை தனியுரிமைச்சட்டங்களை மதிக்கும் மற்றும் நெறிமுறை தரவுப் பயன்பாட்டை உறுதி செய்யும் வலுவான சட்ட கட்டமைப்பிற்குள் செய்யப்பட வேண்டும்.**

எந்தவொரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் வரி விதிப்பு தான் அடிப்படை. இது பொது சேவைகள், உட்கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் கல்விக்கு நிதியளிக்கின்றது. நீண்ட கால வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையை வளர்க்கின்றது. எவ்வாறாயினும், இலங்கையில், வரி ஏய்ப்பு பிரச்சினை ஆபத்தான நிலையை எட்டியுள்ளது. தகுதியுள்ள வரி செலுத்துவோர் ஒரு சிறிய சதவீதத்தினர் மட்டுமே தங்கள் நியாயமான பங்களிப்பை வழங்குகின்றார்கள். இது வரி முறையின் செயல்திறன் குறித்து மட்டுமல்ல, தேசிய வளர்ச்சியில் ஏற்படும் தாக்கம் குறித்தும் கவலைகளை எழுப்பியுள்ளது.

இலங்கையில் வரி செலுத்துவோரில் சிறிய சதவீதத்தினர் மட்டுமே தங்கள் வரிக் கடமைகளுக்கு இணங்குவதாக சமீபத்திய ஆய்வுகள் காட்டுகின்றன. அதிக வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் வணிக உரிமையாளர்கள் முதல் சிறிய அளவிலான வணிகம் செய்பவர்கள் வரை இந்த வரி ஏய்ப்பு பரவலாக உள்ளது. அமைப்பில் உள்ள பாரிய குறைபாடுகள் முதல் மோசமான அமுலாக்கம் மற்றும் பொதுமக்களிடையே வரிக் குறியீட்டைப் பற்றிய புரிதல்இல்லாமைபோன்றன பிரதான காரணங்களாக காணப்படுகின்றது

## வரி வசூலில் உள்ள சவால்கள்

வரி அதிகாரிகள் எதிர்கொள்ளும் சவால்கள் பலதரப்பட்டவை. வரி செலுத்துவோர் பலர் வருமானத்தை குறைத்து மதிப்பிட நிதி பதிவுகளை கையாளுகின்றனர், இது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு (IRD) மோசடியைக் கண்டறிவது கடினமாகின்றது. மேலும், இலங்கையின் முறைசாரா பொருளாதாரம், கணிசமான அளவு, வரி வலைக்கு வெளியே பெரும்பாலும் இயங்குகின்றது. இது விஷயங்களை மேலும் சிக்கலாக்குகின்றது. இந்த நடைமுறைகள் சமூக திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பில் முதலீடு செய்யக்கூடிய மதிப்புமிக்க வருவாயை இலங்கை நாடு ஈட்ட முடியாமல் செய்கின்றன.

## இணக்கத்தை மேம்படுத்த வங்கி பரிவர்த்தனைகளை மேம்படுத்துதல்

நிதி பரிவர்த்தனைகளைக் கண்காணிக்க வங்கித் தரவைப் பயன்படுத்துவது இந்த சிக்கலைத் தீர்ப்பதற்கான மிகவும் நம்பிக்கைக்குரிய வழிகளில் ஒன்றாகும். இலங்கையில் டிஜிட்டல் வங்கியியல் வளர்ச்சியடைந்து வருவதால், அதிகமான குடிமக்கள் முறையான நிதி அமைப்பில் ஈடுபடுகின்றனர். இது அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான வாய்ப்பை வழங்குகின்றது.

பல நாடுகளில், அரசாங்கங்கள் தங்கள் வரி வசூல் அமைப்புகளில் வங்கித் தரவை வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளன. எடுத்துக்காட்டாக, இந்தியா மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

அறிவிக்கப்பட்ட வருமானத்திற்கும் உண்மையான நிதி நடவடிக்கைகளுக்கும் இடையிலான முரண்பாடுகளைக் கண்டறிய வங்கி பரிவர்த்தனைகளில் தரவு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்துகின்றன. வங்கிப் பதிவுகளுடன் வரிக் கணக்குகளை ஒப்பிடுவதன் மூலம், உள்நாட்டு இறைவரித் திணைக்களஅதிகாரிகள் வரி ஏய்ப்புக்கான சாத்தியக்கூறுகளை மேலதிக விசாரணைக்காகக் சிறந்த முறையில் தரவுகளை பயன்படுத்தலாம்.

இலங்கையைப் பொறுத்தவரை, வரி அதிகாரிகள் வங்கிகளுடன் ஒத்துழைக்கும் முறையை நடைமுறைப்படுத்துவது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். வங்கிப் பதிவுகளுக்கான அணுகல் நிதி நடவடிக்கைகளின் தெளிவான தடத்தை வழங்கலாம். வரிஏய்ப்புசெய்யும்தனிநபர்கள் மற்றும் வணிகங்களைக் கண்டறிய இது பெரிதும் உதவுகின்றது. இருப்பினும் நிச்சயமாக இந்த முறைமையினை தனியுரிமைச்சட்டங்களை மதிக்கும்மற்றும் நெறிமுறை தரவுப் பயன்பாட்டை உறுதி செய்யும் வலுவான சட்ட கட்டமைப்பிற்குள் செய்யப்பட வேண்டும்.

இந்த தீர்வுக்கான படிகள் பின்வருமாறு:

கடுமையான மேற்பார்வையுடன், வங்கித் தரவை அணுக வரி அதிகாரிகளை அனுமதிக்கும் சட்டமியற்றும் ஆணை.

- பெரிய அளவிலான பரிவர்த்தனை

தரவை செயலாக்க தொழிநுட்பம் சார்ந்த அணுகுமுறை.

- வரி ஏய்ப்புக்கான அபராதங்களை வலுப்படுத்துதல் ஒரு தடுப்பாக செயல்படும்.

## தனியுரிமை கவலைகள் மற்றும் சந்தேகங்களை நிவர்த்தி செய்தல்

வங்கி பரிவர்த்தனைகளைக் கண்காணிப்பதன் நன்மைகள் தெளிவாக இருந்தாலும், தனியுரிமை பற்றிய கவலைகள் மற்றும் சந்தேகங்கள் உள்ளன. வரி ஏய்ப்பு செய்பவர்களை பிடிப்பதற்காக மட்டுமே இந்த அமைப்பு பயன்படுத்தப்படுகின்றதே தவிர, குடிமக்களின் உரிமைகளை மீறுவதற்கு அல்ல என்பதை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானது. தெளிவான வழிகாட்டுதல்கள் நிறுவப்பட வேண்டும். மேலும் வரி அதிகாரிகளிடமிருந்து வெளிப்படைத்தன்மை பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதில் முக்கியமாக இருக்கும்.

நவீன தொழில்நுட்பம் மற்றும் வங்கியியல் வெளிப்படைத்தன்மையை உள்வாங்குவதன் மூலம் இலங்கை தனது வரி முறையை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. இந்த அணுகுமுறை முறையாக செயல்படுத்தப்பட்டால், வரி இணக்கத்தை கணிசமாக மேம்படுத்தலாம். அரசாங்க வருவாயை அதிகரிக்கலாம் மற்றும் ஒவ்வொரு குடிமகனும் நாட்டின் வளர்ச்சிக்கு நியாயமான பங்களிப்பை வழங்க முடியும். அனைவருக்கும் மிகவும் வளமான எதிர்காலத்தை உறுதி செய்யும் வகையில், டிஜிட்டல் நிதி மேற்பார்வையின் உலகளாவிய போக்கை இலங்கை பின்பற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது.

## வங்கி ஒத்துழைப்பு மூலம் வரி வசூலிப்பதில் உள்நாட்டு வருவாய் பங்கை வலுப்படுத்துதல்

1. வெளிப்படைத்தன்மைக்காக உள்நாட்டு வங்கி கட்டமைப்பினைமேம்படுத்துதல்

இலங்கையில் வரி வசூலிப்பதன் செயற்றிறனை மேம்படுத்துவதற்குஉள்ளூர் வங்கிகளுடன் கூட்டுசேர்வதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு (IRD) ஒரு தனித்துவமான வாய்ப்பு உள்ளது. இந்த ஒத்துழைப்பு எவ்வாறு திறமையான வரிவிதிப்புக்கு வழிவகுக்கும் என்பதை பற்றி பின்வருமாறு நாம் பார்ப்போம்:

» பரிவர்த்தனை தரவுகளுக்கான அணுகல்: தனிநபர் மற்றும் பெருநிறுவன கணக்குகளின் பரிவர்த்தனைகள், வைப்புக்கள் மற்றும் திரும்பப் பெறுதல் பற்றிய விரிவான தரவை அணுக உள்ளூர் வங்கிகளுடன் ஐசுனு முறையாக இணைந்து குறிக்கோளை அடைய முடியும். உண்மையான வங்கிச் செயல்பாடுகளுடன் அறிவிக்கப்பட்ட வருமானங்களை ஒப்பிட்டு சரி பார்ப்பதன் மூலம், ஐசுனு எளிதில் முரண்பாடுகளை அடையாளம் கண்டு, மறைக்கப்பட்ட வருமானம் மற்றும் வரி ஏய்ப்பைக் கண்டறிய இந்த முறைமை உதவுகின்றது.

» தானியங்கு அறிக்கையிடல் வழிமுறைகள்: IRD மற்றும் வங்கி நிறுவனங்கள் தன்னியக்க அறிக்கையிடல் அமைப்பை நிறுவலாம். அங்கு அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகள் (குறிப்பிட்ட வரம்புக்கு மேல்) சரியாகவும் முறையாகவும் இனம் கண்டு வரி அதிகாரிகளிடம் தெரிவிக்கப்படும். இந்த அமைப்பு இந்தியா போன்ற நாடுகளில் உள்ள நடைமுறைகளை பிரதிபலிக்கும். அங்கு அதிகாரிகள் குறிப்பிடத்தக்க நிதி நடவடிக்கைகளின் தானியங்கி அறிக்கைகளைப் பெறுகிறார்கள், பின்னர் அவை தாக்கல் செய்யப்பட்ட வரி அறிக்கைகளுடன் சமரசம் செய்யப்படுகின்றன.

» மின்-தாக்கல் ஒருங்கிணைப்பு (E-filing Integration): வங்கி போர்ட்டல்களுடன் நேரடியாக மின்-தாக்கல் அமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம், வரி செலுத்துவோர் தங்கள் வருமானத்தின் அடிப்படையில் தானியங்கி வரி கணக்கீடுகளுக்கு தங்கள் வங்கிக் கணக்குகளை இணைக்க முடியும். இந்த முறைமை மூலம் முழுமையான தரவுகளை ஒருங்கிணைப்பதன் மூலமும் சமர்ப்பிப்பதன் மூலமும், தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் துல்லியமான வருமானம் மற்றும் வரிகளை அறிவிப்பதை எளிதாக்குகின்றது.

2. இலங்கை வரி செலுத்துவோர் வெளிநாட்டு கணக்குகள் மற்றும் பரிவர்த்தனைகளை கண்காணித்தல்

அதிகரித்து வரும் பூகோளமயமாக்கல் மற்றும் மூலதனத்தின் நகர்வு காரணமாக, பல இலங்கை பிரஜைகள் வெளிநாட்டு கணக்குகளை வைத்துள்ளனர், மற்றும் சர்வதேச நிதி பரிவர்த்தனைகளில் ஈடுபடுகின்றனர். ஐசுனு, உலகளாவிய வங்கி இணையங்களுடன் (நெட்வொர்க்குகளுடன்) இணைந்துசரியான வரி இணக்கத்தை உறுதி செய்வதற்காக இந்தக் கணக்குகளின் மேற்பார்வையை மேம்படுத்தலாம்:

» பொதுவான அறிக்கையிடல் தரநிலையை (CRS) நடைமுறைப் படுத்துதல்: வரி அதிகாரிகளுக்கிடையில் நிதிக் கணக்குத் தகவல்களைத் தானாகப் பரிமாறிக்கொள்வதற்காக OECDஆல் உருவாக்கப்பட்ட சர்வதேச தரநிலையான CRS ஐ இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும். இது இலங்கை குடிமக்களின் கடல்கடந்த கணக்குகள் பற்றிய தரவுகளை வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து IRD பெற அனுமதிக்கும், இதனால் தனிநபர்கள் வெளிநாடுகளில் வருமானத்தை மறைப்பது கடினம்.

» வெளிநாட்டு வரி அதிகாரிகளுடன் ஒத்துழைத்தல்: ஐசுனு பல நாடுகளுடன் வரி தகவல் பரிமாற்ற ஒப்பந்தங்கள் (TIEAs- Tax Information Exchange Agreements) மற்றும் இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தங்கள் (DTAAs - Double Taxation Avoidance Agreements) பற்றி பேச்சுவார்த்தை நடத்தலாம். இந்த உடன்படிக்கைகள் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் வரி அதிகாரிகளிடமிருந்து முக்கியமான நிதித் தகவல்களைப் பெற இலங்கைக்கு உதவும். எடுத்துக்காட்டாக, இலங்கை வெளிநாட்டவர்கள் அல்லது வெளிநாட்டு கணக்குகளைக் கொண்ட வணிகங்களின் முதலீடுகள் மற்றும் பரிவர்த்தனைகள் பற்றிய தகவல்களை இலங்கை அணுகலாம். இது வரி ஏய்ப்புக்கு பயன்படுத்தப்படும் பல்வேறு வழிமுறைகளினை மூட உதவுகின்றது.

» "ஆஃப்ஷோர் வாலண்டரி டிஸ்க்ளோஷர் புரோகிராம்கள்(Offshore Voluntary Disclosure Programs): வெளியிடப்படாத வெளிநாட்டு சொத்துக்களைக் கொண்ட தனிநபர்களுக்கான தன்னார்வ வெளிப்படுத்தல் திட்டங்களை IRD தொடங்கலாம். குறைந்த அபராதங்களுடன் தங்கள் வெளிநாட்டு வருமானத்தை அறிவிக்க ஒரு குறிப்பிட்ட கால சாளரத்தை வழங்குகின்றது. வரி அதிகாரிகளுக்கு மறைக்கப்பட்ட வெளிநாட்டு செல்வத்தின் விபரங்களை வழங்கும் போது இது இணக்கத்தை ஊக்குவிக்கும்.

3. வெளிநாட்டுக் கடன்களை நம்பியிருப்பதைத் தவிர்க்க வங்கித் தரவைப் பயன்படுத்துதல்

வங்கித் துறையுடன் மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பின் மூலம் திறமையான வரி வசூல் வருமானத் தளத்தை கணிசமாக அதிகரிக்கலாம், ஐஆகு, உலக வங்கி அல்லது பிற வெளிநாட்டுக் கடன் வழங்குபவர்களிடமிருந்து மேலும் கடன்களைப் பெறுவதைத் தவிர்க்க

இலங்கைக்கு உதவுகின்றது. இந்த முறைமையினை பின்வருமாறு செயல்படுத்த முடியும்:

» வருவாய் கசிவைக் குறைத்தல்: வங்கி பரிவர்த்தனைக்கண்காணிப்பு மூலம் வரி ஏய்ப்பை நிவர்த்தி செய்யலாம். இதன் மூலம் ஆண்டுதோறும் இழந்த கணிசமான அளவு வருவாயை ஐசுனு மீட்டெடுக்க முடியும். இந்த நிதிகள் முக்கியமான பொருளாதாரத் துறைகளுக்கு திருப்பி விடப்பட்டு, கடன் வாங்குவதற்கான தேவையைப் பெரிதும் குறைக்கலாம்.

» தேசிய வளர்ச்சிக்கு நிதியளித்தல்: மேம்படுத்தப்பட்ட வரிவருவாய் மூலம், பெரிய அளவிலான உள்கட்டமைப்புத் திட்டங்கள், சமூக நலத் திட்டங்கள் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றிற்கு வெளிநாட்டுக் கடன்களை நாடாமல் அரசாங்கம் நிதியளிக்க முடியும். உள்நாட்டு வளத் திரட்டலை வலுப்படுத்துவது நாட்டின் கடன் தகுதியை மேம்படுத்துகின்றது. முற்றிலும் தேவைப்படும் போது கடன் வாங்கும் செலவைக் குறைக்கின்றது.

» முதலீட்டாளர் நம்பிக்கையை அதிகரிப்பது: சிறந்த வரி இணக்கம் மற்றும் வெளிப்படைத்தன்மை மூலம் மேம்படுத்தப்பட்ட நிதி நிர்வாகத்தை வெளிப்படுத்துவதன் மூலம், இலங்கை அதிக வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI) ஈர்க்க முடியும். உலகளாவிய முதலீட்டாளர்கள் வெளிப்படையான அமைப்புகள் மற்றும் நியாயமான வரிவிதிப்பைக் கொண்ட நாடுகளை விரும்புகிறார்கள், இது ஐஆகுஃஉலக வங்கிக் கடன்களைச் சார்ந்திருப்பதையும் குறைக்கும்.

4. சவால்களை எதிர்கொள்வது மற்றும் பொது ஆதரவைப் பெறுதல்

ஒரு வலுவான வரிவிதிப்பு முறையை செயல்படுத்துவதில் சில சவால்கள் உள்ளன, குறிப்பாக ஐசுனுயின் செயல்பாடுகளுடன் வங்கித் தரவை ஒருங்கிணைக்கும் போது. இந்த கவலைகள் மற்றும் சந்தேகங்களை முன்கூட்டியே தீர்க்க வேண்டியது அவசியம்:

» தனியுரிமை மற்றும் பாதுகாப்பு: குடிமக்கள் தனிப்பட்ட நிதித் தகவலை ஐசுனு இன் அணுகலைப் பற்றி சந்தேகங்கள் மற்றும் கவலைகளை ஏற்படுத்தலாம். வங்கித் தரவுகள் வரி நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதையும் தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் உறுதிசெய்யும் தெளிவான சட்டக் கட்டமைப்புகள் மற்றும் தரவுப் பாதுகாப்புச் சட்டங்களை நிறுவுவது அவசியம்.

» பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள்: ஐசுனு, மத்திய வங்கி மற்றும் உள்ளூர் வங்கிகளுடன் இணைந்து, தேசிய வளர்ச்சிக்கான வரி இணக்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் பொது பிரச்சாரங்களைத் தொடங்க வேண்டும். மக்கள் நலனுக்காக வரிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குவது மற்றும் வெளிநாட்டுக் கடன் சார்ந்திருப்பதைக் குறைப்பது வரி இணக்க கலாச்சாரத்தை வளர்க்கும்.

வங்கித் துறையுடன் கூட்டுசேர்வதன் மூலமும், உள்நாட்டு மற்றும் சர்வதேச வங்கித் தரவுகளை மேம்படுத்துவதன் மூலமும், இலங்கையின் உள்நாட்டு வருவாய்த் திணைக்களம் வரி வசூலை கணிசமாக மேம்படுத்தலாம். அதனால் தற்போதைய வருமான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம், மற்றும் ஐஆகு மற்றும் உலக வங்கியின் கடன்களில் தங்கியிருப்பதைக் குறைக்கலாம். ஒரு பயனுள்ள அமைப்பு நடைமுறையில் இருப்பதால், வரி சமத்துவம் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் அதே வேளையில் அதன் வளர்ச்சி இலக்குகளை ஆதரிக்க போதுமான வருவாயை நாடு உருவாக்க முடியும். இத்தகைய சீர்திருத்தங்கள் இலங்கையின் நிதி சுதந்திரத்திற்கும் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கியமானதாகும்.


# தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

## கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்ப்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# சீதனம் ஒரு பார்வை

**ஆண், பெண் என்று பாகுபாடு பாராமல், ஒவ்வொரு பிள்ளைக்குமான, கல்வியும், கற்றலுக்கான தேடலும், பெற்றோரினால் ஊக்குவிக்கப்படுகின்றது என்பது, உண்மையிலேயே பாராட்டப்படவேண்டிய விடயம்! அத்தோடு, கற்ற கல்வியை கொண்டு சொந்த காலில் நிற்கச்சொல்லி குழந்தைகளை வளர்ப்பதும், மதிப்பிற்குரிய விடயம்!**




தமிழிசை

பொதுவாக வீடுகளில், ( எல்லா வீடுகளிலும் அல்ல ) அதுவும் பெண் பிள்ளை உள்ள வீடுகளில், பிள்ளை பருவ வயதை எட்டும் போதே, வரதட்சணையாக கொடுக்கப்போகின்ற பொருட்பட்டியல் குறித்த பேச்சுக்கள், சூடுபிடிக்க தொடங்கும்!

மகளிற்காக, எதை சேர்க்கிறார்களோ இல்லையோ, “நிலமும், தங்கமும் சேர்க்க வேண்டும்” என்ற ஒரு கட்டாய நிர்ப்பந்தம் உறவுக்காரர்களால் விதைக்கப்படும்!

இதையும் தாண்டி, மாப்பிள்ளை வீட்டாரின் னநஅயனெ இற்கு ஏற்ப, கார்!

அதிலும் வுழலழவய, யுரனை, டீஆறு இதுபோன்றவற்றில், அவர்களின் மனதிற்கு தோதான ஒன்று!

இதுபோக, வீடு, அப்படியே சில லட்சங்கள் காசு, எத்தனை லட்சம் என்பது, மறுபடியும் னநஅயனெ அடிப்படையில்!

ஒரு காலம்வரையில், அதாவது பெண்கள் கல்விகற்காமல் வீட்டில் இருந்த காலங்களில், மகளின் எதிர்கால வாழ்விற்காக என்று, பெற்றோர் கொடுத்ததும், கொடுக்க நினைத்ததும் இயல்பே!

இப்போது கூட, உங்கள் மகனுக்கோ, மகளிற்கோ, எதிர்கால தேவைக்காக சொத்துக்களை நீங்கள் அன்பளிப்பாக கொடுங்கள், அது உங்கள் விருப்பம்,

ஆனால், “னநஅயனெ யை அடிப்படையில் கொடுப்பதற்கு பெயர் அன்பளிப்பு இல்லை”, என்பதும் உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும்!

ஆனால் இன்று, இந்த காலகட்டத்தில், பிள்ளையின் கல்விக்காக, அது மகனாக இருந்தாலும் சரி, மகளாக இருந்தாலும் சரி,

கல்விக்கென்றே பெரும் பங்கினை முதலீடு செய்கிறார்கள் பெற்றோர்கள்!

ஆண், பெண் என்று பாகுபாடு பாராமல், ஒவ்வொரு பிள்ளைக்குமான, கல்வியும்,

கற்றலுக்கான தேடலும், பெற்றோரினால் ஊக்குவிக்கப்படுகின்றது என்பது, உண்மையிலேயே பாராட்டப்படவேண்டிய விடயம்! அத்தோடு, கற்ற கல்வியை கொண்டு சொந்த காலில் நிற்கச்சொல்லி குழந்தைகளை வளர்ப்பதும், மதிப்பிற்குரிய விடயம்!

ஆனால், சமீபத்தில், நிஜத்தில், நான் இரண்டு வரதட்சணை காட்சிகளை கடந்தேன்,

1. மகன் தன்னுடைய சொந்த படிப்பிற்காக கடன் எடுத்திருக்கிறான், அதனை மட்டும் பெண் வீட்டார் அடைத்தால் போதும் என்று, மறைமுக னுழறசல முறைமையை, ஒரு குடும்பம் காட்டியது!

2. மருமகளிடம் சீதனம் வாங்கி, தன்னுடைய மகளின் திருமணத்தை ஒரு குடும்பம், வெகுவிமர்சையாக நடத்தி முடிந்திருந்தது,

இந்த இரண்டு குடும்பங்களையும் நான், ஒரு படித்த பின்புலம் உள்ள, மரியாதைகள் நிறைந்த குடும்பமாகத்தான் அதுவரை நினைத்திருந்தேன், ஆனால்.....,

சரி...Back to concept,

ஒவ்வொரு அம்மாக்களும் அப்பாக்களும், பிள்ளைகளை தைரியமானவர்களாக வளர்க்க வேண்டும்,

“என் பிள்ளையை விட வேறெந்த சொத்தும் இல்லை”, என்று பெண் வீட்டாரும்,

“உங்கள் மகளை விட, வேறெந்த சொத்தும் எங்களுக்கு வேண்டாம்” என்று மாப்பிள்ளை வீட்டாரும் இருக்கும் போது, அங்கு தான் மனித மனதின் மகத்தான செயல் ஒன்று இடம்பெறுகிறது் அது தான், ஆத்மார்த்த மரியாதை!

இதே வேளை, சீதனம், வரதட்சணை என்று எதுவுமே கூறாமல்,

மனமுவந்து விரும்பி,

திருமணம் செய்து கொண்டு,

நல்ல தாய்மாரினால், தன்மானம் ஊட்டி வளர்க்கப்பட்ட ஆண் பிள்ளைகளையும் நான் அறிந்திருக்கிறேன், அவர்களிற்கும் ஒருகாலத்தில் பொருளாதார தட்டுப்பாடு, கடன் எல்லாம் இருந்தது, அக்கா, தங்கை என்று, திருமணம் செய்து வைக்க வேண்டிய கட்டாயமும் இருந்தது, ஆனால் அதற்கெல்லாம் அந்த ஆண்கள், பெண் வீட்டினை நம்பியிருக்கவுமில்லை,

பெண் வீட்டிடம் கையேந்தவுமில்லை!

என்னைக்கேட்டால்,

பிள்ளைகளிற்கு நல்ல கல்வியை கொடுக்க வேண்டும், ஒழுக்கத்தை சொல்லித்தர வேண்டும்,

ஜீவகாருண்யத்தோடு வாழ்வது எப்படி என்று வழி காட்ட வேண்டும்,

மற்ற உயிர்களிடத்தில் எப்படி அன்பாய் இருப்பது என்று, அதனை நாம் வாழ்ந்து காட்டி முன்னுதாரணமாக இருக்க வேண்டும்,

கற்ற கல்வியை கொண்டு, தர்க்க ரீதியாக சிந்தித்து, நேர்மையாக, நீதியாக எப்படி செல்வம் சேர்ப்பது? என்று வழி காட்ட வேண்டும்,

இவ்வளவும் தான் என்னை பொறுத்தவரையில், அடுத்த தலைமுறைக்கு தேவையான சொத்துக்கள்!

கொடுத்தே ஆக வேண்டும் என்றால், நான்கு, நல்ல மனம்கொண்ட மனிதர்களை, உங்கள் குழந்தைகளிற்கு அறிமுகம் செய்து வையுங்கள் மனிதனை விடவும் மகத்தான சொத்து, இவ்வுலகில் எதுவும் இல்லை!

# சோளம் பயிரிடுதல் பற்றிய ஒரு பார்வை

அமுதன்



சோளம் வட அமெரிக்காவில் இருக்கின்ற மெக்சிகோ நாட்டை பூர்விகமாகக் கொண்ட ஒரு பயிர் வகையாகும். அந்த நாட்டில் வாழ்ந்த பழங்குடியினர் சோளத்தை உணவிற்கு மட்டுமல்லாமல் பல மருத்துவ சிகிச்சைக்கும் பயன்படுத்தினர்.

### சோளம் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்

சோளத்தை பச்சையாகவோ அல்லது வேக வைத்தோ சாப்பிடுவதால் நார்ச்சத்து நமக்கு முழுமையாக கிடைக்கின்றது. இந்த நார்ச்சத்து மூல நோய் ஏற்படாமல் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

சோளத்தில் இருக்கும் இந்த நார்ச்சத்து குடல், வயிறு புற்றுநோய்கள் ஏற்படாமல் தடுப்பதில் முக்கிய பங்காற்றுகிறது. வயிற்றில் செரிமான அமிலங்கள் சுரப்பை சரி செய்து உண்ணும் உணவுகள் நன்றாக ஜீரணம் ஆக வழிவகை செய்கிறது.

சோளத்தைப் பச்சையாகவோ அல்லது வேக வைத்தோ சாப்பிடுவதால் நார்ச்சத்து நமக்கு முழுமையாக கிடைக்கிறது. சோளத்தில் இருக்கும் இந்த நார்ச்சத்து குடல், வயிறு புற்றுநோய்கள் ஏற்படாமல் தடுப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.

» சோளத்தில் வைட்டமின் பி சத்துகள் அதிகமிருக்கின்றன. அதிலும் குறிப்பாக தயாமின் மற்றும் நியாசின் ஊட்டச்சத்துகள் சோளத்தில் இருக்கின்றன.

» கருவுற்ற பெண்கள் மருத்துவர் அறிவுறுத்திய அளவின்படி சோளம் சாப்பிட்டு வருவது அவர்களுக்கும், அவர்களின் வயிற்றில் வளரும் குழந்தையின் சீரான வளர்ச்சிக்கும் உதவுகிறது.

» சராசரி உடல் எடைக்கு குறைவாக இருப்பவர்கள் சோளத்தை அடிக்கடி சாப்பிட்டு வருவதால் கூடிய விரைவில் திடகாத்திரமான எடையைப் பெற முடியும்.

» இரும்புச்சத்து அதிகம் உள்ள சோளத்தை சாப்பிட்டு வருபவர்களின் உடலில் சிவப்பு ரத்த அணுக்களின் உற்பத்தி அதிகரித்து, ரத்த சோகை குறைபாடு நீங்கும்.

» சோளத்தில் நார்ச்சத்து அதிகமிருப்பதால் இதை சாப்பிட்டு வருபவர்களுக்கு தோலில் ஈரப்பதம் காக்கப்படுவதோடு, சுருக்கங்கள் ஏற்படுவது தாமதமாகிறது.

» சோள மாவை தண்ணீர் அல்லது சிறிது பாலில் கலந்து நன்றாக முகத்தில் பூசி கொண்டு, சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவி வர முகப்பரு தழும்புகள் எண்ணெய் வழிதல் போன்ற குறைபாடுகள் சரியாகும்.



மற்ற ஊட்டச்சத்துக்களை போல ஃபோலிக் ஆசிட் எனப்படும் போலிக் அமிலமும் மனிதர்களின் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத சத்தாக இருக்கிறது. இந்த போலிக் அமிலம் குறிப்பாக கர்ப்பிணிப் பெண்களுக்கு குறைவாக இருக்கும் பட்சத்தில், அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் சராசரி எடைக்கும் குறைவாக பிறக்கும் நிலை உண்டாகிறது. கருவுற்ற பெண்கள் மருத்துவர் அறிவுறுத்திய அளவின்படி சோளம் சாப்பிட்டு வருவது அவர்களுக்கும், அவர்களின் வயிற்றில் வளரும் குழந்தையின் சீரான வளர்ச்சிக்கும் பெருமளவு உதவுகிறது.

கலோரி சத்துக்கள் நிறைந்த ஒரு இயற்கை உணவுப் பொருளாக சோளம் இருக்கிறது. 100 கிராம் சோளத்தில் 365 கலோரிச் சத்துக்கள் இருக்கின்றது. எனவே தான் இந்த சோளத்தில் இருக்கின்ற மஞ்சள் மற்றும் வெள்ளை நிறப் பொருட்கள் விரைவில் உடல் எடை கூடுவதற்கு உதவுகிறது. சராசரி உடல் எடைக்கு குறைவாக இருப்பவர்கள் சோளத்தை அடிக்கடி சாப்பிட்டு வருவதால் கூடிய விரைவில் திடகாத்திரமான எடையை பெற முடியும்.

சோளத்தை பச்சையாக சாப்பிடுவதாலும், சோளத்திலிருந்து பெறப்படும் சோள எண்ணெய்யை உணவு பயன்பாட்டிற்கு உபயோகிப்பதாலும் இதய நலம் காக்கபடுவதாக பல மருத்துவ ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

நடவு பயிர் பின்வரும் நன்மைகளைக் கொண்டுள்ளது.

» நடவு வயலில் கால அளவு 10 நாட்கள்



குறைகிறது.

» நேரடியாக நடவு செய்த பயிர்களை தண்டு ஈ முதல் மூன்று வாரங்களில் தாக்குகிறது. இவற்றை கட்டுப்படுத்துவது கடினம். இவை நாற்றங்காலிலேயே திறம்பட கட்டுப்படுத்தப்படுகின்றன.

» நாற்றுகளில் வெளிறிய மற்றும் அடிச்சாம்பல் நோய் அறிகுறிகள் தென்பட்டால் அவை நீக்கப்படுகிறது. எனவே அடிச்சாம்பல் நோய் நிகழ்வு நடவு வயலில் குறைகிறது.

» நடவிற்கு ஆரோக்கியமான நாற்றுகளை பயன்படுத்துவதால் எல்லா பயிர்களும் நன்றாக வளர்கின்றன.

» எக்டருக்கு 2.5 கிலோ என்ற அளவில் விதை வீதம் குறைகிறது.

பயிர் எண்ணிக்கை

10 சதுர மீட்டருக்கு 150 பயிர்கள் என்ற எண்ணிக்கையில் குத்துக்கு ஒரு பயிர் விட வேண்டும்.

நாற்றாங்கால்

நாற்றாங்கால் தயாரித்தல்

ஒரு எக்டர் நடவு செய்ய 7.5 சென்ட் நாற்றாங்கால் தேவைப்படும். நாற்றாங்கால் நிலத்தை நன்கு உழுது, கட்டிகள் இல்லாமல் நிலத்தை தயார் செய்யவேண்டும்.

தொழுஉரம் இடுதல்

நன்கு மக்கிய தொழு உரம் 750 கிலோவை நிலத்தில் இட்டு நன்கு உழவேண்டும். நாற்றங்காலில் விதைத்தபிறகு 500 கிலோ மட்கிய தொழு உரம் கொண்டு விதையை மூடிவிடவேண்டும்.

மேட்டுப்பாத்தி அமைத்தல்

ஒவ்வொரு பாத்தியும் 2 மீட்டர் × 1.5 மீட்டர் அளவுள்ளதாக அமைத்து இடையில் 30 செ.மீ அகலமுள்ள வாய்க்கால்கள் இடையிலும், பாத்தியை சுற்றியும் வருமாறு அமைத்தல் வேண்டும். வாய்க்கால்கள் 15 செ.மீ ஆழமுள்ளதாக இருக்கவேண்டும்.

விதைநேர்த்தி

விதைகளை விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பண்டாசிம் (அ) கேப்டான் (அ) திரம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

நாற்றாங்காலில் விதைப்பதற்கு முன் 3 பொட்டலம் அசோஸ்பைரில்லம் (600 கிராம்ஃ எக்டர்) மற்றும் 3 பொட்டலம் பாஸ்போபேக்டீரியா (600 கிராம்/ எக்டர்) அல்லது 6 பொட்டலம் அசோபாஸ் (1200 கிராம்ஃ எக்டர்) கலந்து விதைநேர்த்தி செய்யவேண்டும்.

நாற்றங்கால் விதைப்பு

மேட்டுப்பாத்திகளில் 7.5 கிலோ விதையை நாற்றாங்காலில் அதிக ஆழமில்லாமல் விதைக்கவேண்டும்.

நீர் நிர்வாகம்

விதைத்தவுடன் மற்றும் விதைத்த 3,7,12,17ம் நாள் நீர் கட்ட வேண்டுதல் அவசியம். களிமண் பாங்கான பூமிக்கு விதைத்தவுடன் மற்றும் விதைத்த 3,9,16 ஆம் நாள் நீர் பாய்ச்சினால் போதுமானதாகும்.

நிலம் தயாரித்தல்

நிலத்தை இரும்புக் கலப்பைக் கொண்டு இருமுறையும், நாட்டுக்கலப்பைக் கொண்டு இருமுறையும் உழுது கட்டிகள் இல்லாமல் தயார் செய்யவேண்டும்.

தொழு உரம் இடுதல்

12.5 டன்/எக்டர் தொழு உரம் பரப்பவேண்டும். அதை நாட்டு கலப்பையைக் கொண்டு உழவேண்டும் மற்றும் 10 பொட்டலம் அசோஸ்பைரில்லம் (2000 கிராம்/எக்டர்) மற்றும் 10 பொட்டலம் (2000 கிராம்ஃஎக்டர்) பாஸ்போபேக்டீரியா அல்லது 20 பொட்டலம் அசோபாஸ் (4000 கிராம/எக்டர்) கலந்து மண்ணில் இடவேண்டும்.

பார், பாத்தி அமைத்தல்

45 செ.மீ இடைவெளியில் பார்கள் அமைக்கவேண்டும். அல்லது நீர் அளவை பொறுத்து 10 அல்லது 20 சதுர மீட்டர் பாத்திகள் அமைக்கவேண்டும்.



# நிலத்தடி நீருக்கு ஆபத்தை விளைவிக்கும் குழாய் கிணறுகள்

**விகடன்**

உலகமெங்கும் நிலத்தடிநீரில் பாரியளவில் மாற்றம் ஏற்பட்டுவருகிறது. நாளாந்தம் அதிகளவு நிலத்தடிநீர் உறிஞ்சப்பட்டு வருகிறது. ஆனால் அதற்கு ஈடாக நிலத்தில் நீர் சேமிக்கப்படுவதில்லை. பருவமழை வீழ்ச்சியும்கடந்த காலங்கள்போன்றுதற்போது இல்லை,பெய்கின்ற மழைநீரும்நிலத்தடிக்கு சென்றுசேமிக்கப்படுவதனை விட ஆறுகளில் சேர்ந்து கடலுக்கு செல்வது அதிகமாகியுள்ளது. இதனால் நிலத்தடிநீர் வெகுவாக குறைந்து வருகிறது. இதன் காரணமாகவே எண்பதுகளில் பத்து பதினைந்து அடி ஆழத்தில் காணப்பட்ட நிலத்தடிநீர் தற்போது நூறு அடிவரை சென்றிருக்கிறது.

உலக அளவில் உள்ள தண்ணீரில் வெறும் 04 வீத நீர் மட்டுமே குடிநீராக உள்ளது. அந்த நீரும்தற்போது குறைந்தும்இ மாசுபட்டும் வருகின்றமை உலக உயிரினத்திற்கே விடுக்கப்பட்டிருக்கும் சவாலாகும். 1995 இற்குப் பின்பு புவியின் வெப்பம்பெருமளவுக்கு அதிகரித்து வருகிறது என ஆய்வாளர்கள் தொடர்ச்சியாக எச்சரித்து வருகின்றனர்.இதன் தாக்கமே புவியின் சாதாரண வெப்ப அளவின் விகிதம் பெருமளவுக்கு கூடியிருக்கிறது. கரியமிலவாயு - ஓசோன் மண்டலத்தாக்கம், என்பவற்றோடு காடுகளை அழிப்பதும் எரிபொருட்களின் வெப்பநிலை என்பன புவியின் வெப்பம் அதிகரிப்பதற்கு காரணங்களாக அமைகின்றன. நான்கு இலட்சம் ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு புவியில் காபனீரொட்சைட் அதிகரித்திருக்கிறது எனவும் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்குக்காரணம்தொழிற்சாலைகள்எனவும் அவர்கள் கூறுகின்றனர். இந்தக் கரியமில வாயுவினால் புவிக்கும்- சூரியனுக்கும் இடையே உள்ள மிலன்கோவிட்ச் வலயம் பாதிப்படையும் என்றும் அதன் விளைவுவாக துருவப் பனி வேகமாக உருகும் எனவும் இதனால் துருவ நன்னீர் வளமும்குறைவடையும்எனவும்ஆய்வுகள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றன.

**இந்த நிலைமைகள் பொதுவாக உலக நன்னீர் நிலைமைகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்ற எச்சரிக்கையுடனான ஆய்வுகள் ஆகும். நன்னீர் நிலைமைகள் தொர்பில் வடக்கிலும் இதே நிலைமைதான் இன்று ஏற்பட்டுள்ளது. வடக்கின் நிலத்தடி நீர் மிக மோசமான அளவில் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. வருடத்திற்கு வருடம் நிலத்தடி நீரில் மாற்றம் ஏற்பட்டு வருவது வெளிப்படையாக தெரிவதாக நீர்ப்பாசனத் திணைக்கள பொறியிளலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.**

இந்த நிலைமைகள் பொதுவாக உலக நன்னீர் நிலைமைகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்ற எச்சரிக்கையுடனான ஆய்வுகள் ஆகும். நன்னீர்நிலைமைகள்தொடர்பில்வடக்கிலும் இதே நிலைமைதான் இன்று ஏற்பட்டுள்ளது. வடக்கின் நிலத்தடி நீர் மிக மோசமான அளவில் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. வருடத்திற்கு வருடம் நிலத்தடி நீரில் மாற்றம் ஏற்பட்டு வருவது வெளிப்படையாக தெரிவதாக நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.




உலகமெங்கும் நிலத்தடிநீரில் பாரியளவில் மாற்றம் ஏற்பட்டுவருகிறது. நாளாந்தம் அதிகளவு நிலத்தடிநீர் உறிஞ்சப்பட்டு வருகிறது. ஆனால் அதற்கு ஈடாக நிலத்தில் நீர் சேமிக்கப்படுவதில்லை. பருவமழை வீழ்ச்சியும்கடந்த காலங்கள்போன்றுதற்போது இல்லை,பெய்கின்ற மழைநீரும்நிலத்தடிக்கு சென்றுசேமிக்கப்படுவதனை விட ஆறுகளில் சேர்ந்து கடலுக்கு செல்வது அதிகமாகியுள்ளது. இதனால் நிலத்தடிநீர் வெகுவாக குறைந்து வருகிறது. இதன் காரணமாகவே எண்பதுகளில் பத்து பதினைந்து அடி ஆழத்தில் காணப்பட்ட நிலத்தடிநீர் தற்போது நூறு அடிவரை சென்றிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டம் கடல் மட்டத்தில் இருந்து சுமார் முப்பது மீற்றருக்கு குறைவான உயரத்தை கொண்ட ஒரு மாவட்டம். கிளிநொச்சி நகரும், இரணைமடு உட்பட நகரை அண்டிய சில பகுதிகளுமே முப்பது மீற்றர் உயரத்தில் காணப்படுகிறன. ஏனைய பிரதேசங்கள் அதனிலும் குறைவான உயரத்தில் உள்ளன குறிப்பாக பூநகரி,பளை, கண்டாவளையின் சில பகுதிகளில் கடல் மட்டத்திற்கு நிலத்திற்குமான உயரம் ஐந்து அடிகள்,பத்து அடிகள் எனும் அளவிலே காணப்படுகிறது. எனவே கடல் மட்டத்தில் இருந்து சொற்ப அளவு உயரம் கொண்ட மாவட்டமே கிளிநொச்சியாகும்.

அவ்வாறான ஒரு மாவட்டத்தில் நிலத்தடி நீரை பயன்படுத்துகின்ற முறையும், பயன்படுத்துகின்ற அளவும் நன்கு திட்டமிடப்பட்டதாக இருக்க வேண்டும். நிலத்தடி நீர் என்பது வரையறுக்கப்பட்ட அளவாகும். நிலத்தடி நீர் வளம் பெருகி வருகின்ற வளம் அல்ல என்பதனை புரிந்துகொள்ள வேண்டும். பத்து பதினைந்து அடிகள் ஆழத்தில் காணப்பட்ட நிலத்தடி நீர் நூறு அடிகள் வரை சென்றிருப்பதன் காரணம் அதுவே. மேலே குறிப்பிட்ட பல்வேறு காரணங்களே நிலத்தடி நீரை பாதிக்கின்ற காரணிகளாக அமைந்து வருகின்றன.

# மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள்...




நமக்கு நாமே செய்துகொள்ளும் கேடுகளைப் பார்க்கையில் இரசாயன விவசாயம், உணவுக் கலப்படம், ஃபாஸ்ட் புட் என பட்டியல் நீள்கிறது! அந்த வரிசையில் தற்போது மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளும் சேர்ந்துள்ளன.

மரபணு மாற்றப்பட்ட உணவுவகைகளை இலங்கையில் நுழைக்கப்பார்ப்பது உண்மையில் நமக்கெல்லாம் ஒரு சோதனையான காலம்தான். இப்போது இந்த வகையில் கத்தரிக்காயை நுழைக்கப் பார்க்கிறார்கள். ஆனால், இந்த நாட்டில் கடந்த 4,000 வருடங்களாக ஆயிரக்கணக்கான கத்தரி வகைகளைப் பயிரிட்டு வருகிறோம். கடந்த 10 முதல் 15 வருடங்களாகத்தான் கத்தரியில் அதிகப் பூச்சித் தொல்லை இருக்கிறது. அதற்காக மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதையை அறிமுகம் செய்வது பொறுப்பற்ற செயல்.

இந்தத் தொழில்நுட்பத்தால் விவசாயிக்கு அதிக லாபம் கிடைக்கும் என்ற கண்ணோட்டமும் தவறு. ஏனெனில் மரபணு மாற்றப்பட்ட பருத்தியை மூன்று முறை பயிரிட்டபின் நிலத்தின் விளைச்சல் மிகவும் பாதிக்கப்படுவதாகத் தற்போது சொல்கிறார்கள். எனவே, மனிதனுக்கு நிச்சயமாகக் கெடுதல் வராது என்று பரிசோதனை மூலம் நிரூபிக்காமல் அறிமுகப்படுத்துவது சரியல்ல.


பூச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால், இயற்கை விவசாயத்தைத் தீவிரப்படுத்தலாம். அதை விடுத்து, இதுபோன்று அறிமுகம் செய்வது பல நிலைகளிலும் கெடுதல் தரும். மரபணு மாற்றப்பட்ட கத்தரியை பூச்சி சாப்பிடும்போது அஜீரணத்தால் இறந்துவிடுகிறது. எனவே, நாளடைவில் இது விஷம் என்று அந்தப் பூச்சி சாப்பிடுவதில்லை. பூச்சி சாப்பிடாத உணவு மனிதன் மட்டும் ஏன் சாப்பிட வேண்டும்? புழு, பூச்சிக்கு வயிறு கெடும்போது, மனிதனுக்கு வயிறு கெடாதா?

மரபணு மாற்றப்பட்ட காய்கறிகள் பயிரிடுவது மக்களின் ஆரோக்கியத்துக்கும் கெடுதல், சுற்றுச் சூழலுக்கும் கெடுதல். சுற்றியுள்ள மற்ற தாவரங்களும் பாதிக்கப்படுகின்றன. மேலும், மண்ணில் உள்ள உயிரினங்கள் அழிந்துவிடுகின்றன. மரபணு மாற்றப்பட்ட பருத்தி நடைமுறைக்கு வந்தபோது அதை உபயோகித்தவர்கள் மற்றும் சுற்றியிருந்த மக்களுக்கு பலவிதமான நோய், ஒவ்வாமை ஆகியவை வந்தன. இவை விஞ்ஞானப்பூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற வெகு சில நாடுகளில்தான் மரபணு மாற்றப்பட்ட பயிர்களைப் பயிர் செய்கிறார்கள். அங்கேயும் இது மக்களின் விருப்பத்தால் நடக்கவில்லை. அங்கே தனியார்கள், அரசாங்கத்தைவிட சக்திபடைத்தவர்களாக இருப்பதால்தான் இது நடக்கிறது. ஐரோப்பிய நாடுகளில் இது உபயோகப்படுத்தப் படவில்லை. பெரும்பாலான விஞ்ஞானிகளும் இதை எதிர்க்கத்தான் செய்கிறார்கள்.

நம் நாட்டில் மிக அதிகமான சதவீதத்தினர் காய்கறி உணவு உண்பவர்கள். ஏற்கெனவே நிறையக் காய்கறி வகைகளின் உபயோகம் நம் நாட்டில் மறைந்து வருகிறது. கம்பு, சோளம், ராகி போன்றவற்றின் உபயோகமும் மறைந்து தற்போது மக்கள் தீட்டப்பட்ட அரிசிதான் பெரும்பாலும் சாப்பிடுகிறார்கள். இப்படி இருக்கும்போது ஒரு மனிதனுக்குத் தேவையான சக்தி வேண்டுமென்றால், பல காய்கறி வகைகள் தேவை. இப்போது இயற்கை உருவாக்கியவற்றை எல்லாம் அழித்து விட்டு நாம் ஏதோ புது இயற்கையை உருவாக்கப்போகிறோம் என்பது மிகவும் தவறான அணுகுமுறை. எனவே, நிரந்தரத் தீர்வாக இயற்கை விவசாயத்தை முயற்சிக்க வேண்டுமே தவிர, இதுபோல மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை அறிமுகப்படுத்துவது தவறு.

மேலும், இந்தத் தொழில்நுட்பத்தால் விவசாயிக்கு அதிக லாபம் கிடைக்கும் என்ற கண்ணோட்டமும் தவறு. ஏனெனில் மரபணு மாற்றப்பட்ட பருத்தியை மூன்று முறை பயிரிட்டபின் நிலத்தின் விளைச்சல் மிகவும் பாதிக்கப்படுவதாகத் தற்போது சொல்கிறார்கள். எனவே, மனிதனுக்கு நிச்சயமாகக் கெடுதல் வராது என்று பரிசோதனை மூலம் நிரூபிக்காமல் அறிமுகப்படுத்துவது சரியல்ல. மேலும், விவசாயியின் கையில்தான் எப்போதும் விதை இருக்க வேண்டுமே தவிர, ஏதோ ஒரு கம்பெனியின் கையில் இருக்கக் கூடாது. நம் நாட்டில் 100 கோடி மக்களுக்கு மேல் இருக்கிறோம். ஆயிரக்கணக்கான பயிர்கள் விளைவிக்கிறோம். இத்தனை பேருக்கும் உணவு தயாரிக்க கடைசியில் விதைகளை வெளிநாட்டில் இருந்து எதிர்பார்ப்பது என்பது இறுதியில் அடிமைத்தனத்தைத்தான் கொண்டுவரும்!




தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

ஞாயிற்றுக்கிழமை
17.11.2024

# திறனுறு கல்வி

**தொழில் நோக்கமுள்ள (career-focused) கல்வி முறை என்பது, மாணவர்களின் திறமைகளை கற்றல் மற்றும் மேம்பாட்டின் மீது மையமாக்குகிறது. இதன் மூலம் மாணவர்கள் அவர்களது துறைகளில் தேவைப்படும் திறன்களையும், நடைமுறையாக கற்றல் மற்றும் செயல்முறை திறன்களையும் அடைய முடியும்.**

குரு



போட்டி போட்டு மனப்பாடம் செய்யும் கல்வி முறை அதிகமாக அறிவாளிகளை உருவாக்காது.

இன்றைய கல்வி முறை, குறிப்பாக பரீட்சை மையமாக மட்டுமே அமைந்திருக்கும்போது, மாணவர்கள் மனப்பாடத்தை குறிக்கோளாகக் கொண்டு படிக்க வேண்டிய நிலை உருவாகிறது. இதனால் அவர்கள் பாடத்தையும், பொருளையும் ஆழமாகப் புரிந்துகொள்ளாமல், தேர்வில் மதிப்பெண் பெறுவதற்காக மட்டும் பயிற்சி செய்கிறார்கள். இது படிப்பின் ஆழமான புரிதலை குறைக்கும் வாய்ப்புக்குக் காரணமாகின்றது.

இதற்கு மாறாக, தொழில் நோக்கமுள்ள (career-focused) கல்வி முறைஎன்பது, மாணவர்களின் திறமைகளை கற்றல் மற்றும் மேம்பாட்டின் மீது மையமாக்குகிறது. இதன் மூலம் மாணவர்கள் துறைகளில் தேவைப்படும் திறன்களையும், நடைமுறையாக கற்றல் மற்றும் செயல்முறை திறன்களையும் அடைய முடியும்.

தொழில் நோக்கு மிக்க கல்வி முறையின் முக்கிய அம்சங்கள்:

1. திறன் அடிப்படையிலான கற்றல்: தொழிலில் நேரடியாகப் பயன்படுத்தக்கூடிய திறன்கள் மற்றும்அனுபவங்களைமாணவர்கள் கற்றுக்கொள்வது முக்கியம். இது தொழில் பயிற்சி (internships) அல்லது தொழிற்சாலைப் பயிற்சி (apprenticeships) வாயிலாக கிடைக்கும்.

2. பயிற்சியுடன் கூடிய கல்வி: ஒரே நேரத்தில் கல்வியும் வேலை அனுபவமும் பெறும் வாய்ப்பை வழங்குவது, மாணவர்களுக்கு தொழில்முறை நடைமுறைகளில் திறன்களை வளர்க்க உதவுகிறது.

3. தொழில்நுட்ப வளம்: தொழில்நுட்பங்கள் மற்றும் அறிவியல் மாற்றங்களைப் பயன்படுத்தி, மாணவர்களுக்கு தொழில் சார்ந்த படைப்புகளை உருவாக்கவும், படிக்கவும்வலுவான வாய்ப்பு வழங்குகிறது.

4. சுயமாக யோசிக்கும் திறன்: போட்டி மனப்பாடம்செய்யாமல், தங்களின் சுயமான யோசனை, அனுபவம், மற்றும் ஆழமான புரிதலை அடைய உதவுகிறது.

5. சிந்தனை மற்றும் தீர்வு காணும் திறன்: தொழில் முறை சார்ந்த கல்வியில், மாணவர்கள் சிந்தனைத் திறன், சிக்கல் தீர்க்கும் திறன், குழுவாக வேலை செய்யும் திறன் போன்றவற்றை அதிகம் பயில்வார்கள்.

இந்த முறை மாணவர்களின் வேலை வாய்ப்பை மட்டுமின்றி, தொழில் முன்னேற்றத்திற்கும், சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்கவும் உதவும்.

# மனையியல் பொருளாதாரம் (Home Economics)



மனையியல் பொருளாதாரம் என்பது குடும்பத்தின் பொருளாதார மற்றும் வாழ்க்கை மேலாண்மைக்கு தேவையான திறன்களை கற்றுத்தரும் ஒரு துறை. இது குடும்ப உறுப்பினர்களின் நலன், நலவாழ்வு, மற்றும் தன்னிறைவை மேம்படுத்துவதற்கான புலமாகும். மனையியல் பொருளாதாரம் பல்வேறு துணைத்துறைகளை உள்ளடக்கியது:

1. நிறுவனம்மற்றும்நிதிமேலாண்மை - குடும்பத்தின் வருமானத்தை எளிய முறையில் மேலாண்மை செய்வது, சேமிப்பு மற்றும் முதலீடு பற்றிய அறிவு பெறுவது

2. ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் – குடும்ப உறுப்பினர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கான வழிமுறைகளை கற்றுக்கொடுத்தல், பச்சையுணவு சமைத்து சாப்பிடுதல், மற்றும் நோய்களைத் தவிர்ப்பது.

3. சமையல் மற்றும் ஊட்டச்சத்து -சமையல் மற்றும் சத்துமிக்க உணவை உருவாக்குதல். இதில் ஊட்டச்சத்து அறிவு முக்கியமாக செயல்படுகிறது, ஏனெனில் இது குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது.

4. தையல் மற்றும் உடை பராமரிப்பு – கைகளால் தையல் செய்வது, உடைகளை சரியாக பராமரிக்க கற்றுக்கொடுத்தல், இதன் மூலம் பொருளாதார சிக்கல்களைக் குறைக்கலாம்

5. சுற்றுச்சூழல் மேலாண்மை -வீட்டு உபயோக பொருட்களை சரியாக பயன்படுத்தி, இயற்கை வளங்களை சிக்கனமாகச் செயல்படுத்துதல். மனையியல் பொருளாதாரத்தின் முக்கிய நோக்கம் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் பணியாற்ற முடியாத சந்தர்ப்பங்களில் கூட பொருளாதார நிலைத்தன்மையைப் பேணுதல், மற்றும் குடும்ப நலனை மேம்படுத்துதல் என்பதே ஆகும்.

மனையியல்பொருளாதாரம்: வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்திய நடைமுறை மனையியல் பொருளாதாரம் என்பது ஒரு குடும்பத்தின் வாழ்க்கை நலன் மற்றும் பொருளாதார நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கொண்ட ஒரு துறையாகும். இதன்மூலம் சமூகத்தில் பெருமளவில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இதற்கான முக்கிய காரணமாக, மனையியல்பொருளாதாரத்தின் வழிவகுத்த வாழ்க்கைத் திறன்களும், பொருளாதார மேலாண்மையின் அறிவுரைகளும்இருக்கின்றன. மனையியல் பொருளாதாரம் வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது

**1. பொருளாதார சுயநிறைவு**

மனையியல் பொருளாதாரம் குடும்பங்களுக்கான நிதி மேலாண்மைத் திறன்களை வளர்த்துள்ளது. வருமானத்தைச் சிக்கனமாக பயன்படுத்துதல், சேமிப்பு, முதலீடு போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துவதன்மூலம், இது குடும்பங்களை நிதி சுயநிறைவை அடைய உதவியுள்ளது.

**2. சத்தான உணவுப் பழக்க வழக்கங்கள்:**

மனையியல் பொருளாதாரம் மூலம் குடும்பங்களில் உணவுப் பாதுகாப்பும் ஊட்டச்சத்து மேலாண்மையும் மேம்பட்டுள்ளன. மக்கள் சத்துமிக்க உணவுகளைத் தேர்வு செய்வதற்கும், ஆரோக்கியமான சமையல் முறைகளைப் பயன்படுத்துவதற்கும் வழிகாட்டியுள்ளது. இது மக்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, நோய்களைத் தடுக்க உதவுகிறது

**3. சுற்றுச்சூழல் பொறுப்பு**

மனையியல்பொருளாதாரம்சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. வீட்டு அளவில் பிளாஸ்டிக் மற்றும் காகிதம் போன்ற பொருட்களின் சிக்கனப் பயன்பாட்டை ஊக்குவிக்கிறது, மற்றும்சுழற்சி (recycling) மற்றும் மீள்பயன்பாடு (reuse) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இதன் மூலம், தனிநபர் மட்டுமன்றி சமூக அளவிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உதவியுள்ளது.

**4. குடும்ப உறவுகள்:**

மனையியல் பொருளாதாரம் குடும்ப உறவுகளைப் பயிற்றுவிக்கவும், உறுதிப்படுத்தவும் உதவுகிறது. இத்தகைய பயிற்சிகள் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒற்றுமையை உணர்த்தி, அவற்றில் பதற்றத்தை குறைக்கும். இதன் மூலம் குடும்ப உறவுகள்நல்ல முறையில்நடைபெற வழிவகுக்கிறது. 5. பெண்களின்பொருளாதார முன்னேற்றம்: மனையியல் பொருளாதாரம் பெண்களுக்கு தங்கள் குடும்பங்களின் பொருளாதார மேலாண்மையில் பங்குபெற வழிவகுக்கிறது. சமையல், தையல், மற்றும் சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு அவர்கள் தங்கள் சொந்த வருமானத்தை உருவாக்க முடிகிறது. இது பெண்களின் சுயநிறைவை மேம்படுத்தி, குடும்பத்திற்கும் நாட்டிற்கும்பொருளாதார நிலைத்தன்மையை வழங்குகிறது. மொத்தத்தில், மனையியல் பொருளாதாரம் வாழ்க்கை முறையை அடிப்படையில் மாற்றியுள்ளது. இது சுயநிறைவு, ஆரோக்கியம், சுற்றுச்சூழல் பொறுப்பு, மற்றும் குடும்ப ஒற்றுமை ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் தனிநபர்களுக்கும் சமூகத்திற்கும் நன்மைகளை அளிக்கிறது.

## முல்லைத்தீவு மாவட்டத்தில்....

# ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் தொழில் பயிற்சி நிலையம்...

இலங்கையில் பல குடும்பங்கள் பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்கின்றன.

வேலை வாய்ப்பின் குறைவான நிலை, பொருளாதார மாற்றங்கள், மற்றும் உள்நாட்டுப் போரின் பின்விளைவுகள் போன்றவை குறிப்பாக பல குடும்பங்களில் பொருளாதாரப் பின்தங்கலை ஏற்படுத்தி உள்ளன. இந்நிலையில், தொழில் பயிற்சி நிலையங்களை உருவாக்குவது இலங்கையின் குடும்பங்களின் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்க முக்கிய வழியாக இருக்கக்கூடும்.

தொழில் பயிற்சி நிலையங்கள் புதிய திறமைகளை மக்கள் பெறுவதற்கு உதவுகின்றன. வேலை வாய்ப்புக்காக பலரும் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தவிர்க்கவும், சொந்த நாட்டிலேயே சிறந்த வேலையைப் பெறவும் தொழில் பயிற்சி பெரிதும் துணைபுரிகிறது. இந்த பயிற்சிகள் கட்டுமானம், தகவல் தொழில்நுட்பம், பானிப்பு தொழில்கள், விவசாயம் போன்ற பல துறைகளில் வழங்கப்படுகின்றன.

இதன் அடிப்படையில் போரினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும்மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில், ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் நிறுவனத்தின் அனுசரமையுடன் mission mail நிறுவனம் நடத்துகின்ற இலவச தையல் தொழிற்பயிற்சி கூடத்தினை தரிசித்தோம்.

கடந்த இரண்டு வருடங்களாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த தொழில்கூடத்தில் ஏற்கனவே மூன்று தொழில் பயிற்சி அணியினர் தமது தொழில் பயிற்சி நிறைவு செய்து வெளியேறியிருக்கின்றனர் தற்போது நான்காவது தொழிற்பயிற்சி அணியினர் தமது தொழிற்பயிற்சியினை முன்னெடுத்து வருகின்ற இந்த வேளையில் இவர்களுக்கான பயிற்சிக்கு தேவையான சகல உபகரணங்களும் இலவசமாக கொடுக்கப்படுவதோடு தேர்ச்சி பெற்ற ஆசிரியர் ஒருவரால் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றது. பயிற்சி நிறைவில் அவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் கண்காட்சி என்பன நடைபெற்றிருந்தன.

மிகவும் சிரத்தையோடு மக்களுக்கு பணியாற்றுகின்ற ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் நிறுவனத்தின் நிறுவுனர் ஜெ.ஜீவன் அவர்களை தொடர்பு கொண்டு கேட்டபோது, நாங்கள் ஏற்கனவே வீட்டுத்திட்டங்கள் கல்வி மற்றும் மருத்துவ அனுசரணைகள் வாழ்வாதாரங்கள் என்று பல்வேறு

சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் அதன் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் இருந்து வேலை வாய்ப்பு இன்றி இருக்கின்ற பெண்களுக்கான திட்டம் ஒன்றினை முன்னெடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு அமைவாக முதலில் தையல் தொழில்பயிற்சிக் கூடம் ஒன்றினை உருவாக்குவோம் என்று திட்டமிட்டோம் . உண்மையில் நாங்கள் ஆரம்பித்த இந்த திட்டத்திற்கு தன்னுடைய முழு ஆதரவையும் mission mail நிறுவனத்தின் நிறுவுனர்கள் தான் வழங்கி இருந்தார்கள் அவர்கள் இந்த நிறுவனத்திற்கும் எங்களுடைய மக்களுக்கும் ஆற்றும் பணிகள் வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை. இந்த நேரத்தில் மிஷன் மெயில் நிறுவனத்திற்கும், தொடர்ச்சியாக வீட்டுத்திட்டங்களை மக்களுக்கு வழங்குவதற்கு நமக்கு கை கொடுத்துக் கொண்டிருக்கின்ற, மக்களுக்கான தேவைகளில் உடனடியாக கரம் கொடுக்கின்ற SQM பவுண்டேஷன் நிறுவனத்தினருக்கும் எனது நன்றிகளை கூற விரும்புகின்றேன்.




உங்களுக்குத்தெரியும் போதும் என்றளவுக்கு இயற்கை அனர்த்தங்களும் உலுப்பி போட்ட மாவட்டம்தான் முல்லைத்தீவு இங்கே அதிகளவான பெண்தலைமைத்துவ குடும்பங்களும் வறுமை கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றனர். ஆகவே இம்மக்களுக்காக இன மத வேறுபாடுகளை கலைந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தொழில் பயிற்சிகளையும் தொழில் வாய்ப்புகளையும் வழங்குவதே நமது நோக்கமாகும் மக்களுக்கான அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் ஜீவ ஊற்று அன்பின் கரம் நிறுவனத்தோடு தம்முடைய கரங்களை இணைத்துக் கொண்டு இன்று வரைக்கும் செயலாற்றுகின்ற அத்தனை நன்கொடையாளர்களுக்கும் நான் நன்றிகளை கூறுகிறேன் இவ்வாறு புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்கள் எங்களுடைய மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்துவதற்கான சமூக நலத்திட்டங்களையும் பயிற்சி தொழில் பயிற்சி கூடங்களையும் உருவாக்குவதற்கு முன் வர வேண்டும் என்று பதிலளித்தார்.

இவ்வாறு ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் நிறுவனத்தின் தொழில் கூடத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கான தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் தொழில் நிலையம் ஒன்றையும் எதிர்வரும் காலங்களில் அமைக்க இருப்பதாக நிறுவனத்தின் நிறுவுனர் ஆர்வத்தோடு தெரிவிக்கின்றார்..

இந்தத் தொழில் பயிற்சி கூடத்திற்கான சகல செலவினங்களையும் மிசன் மெயில் நிறுவனத்தினர் தங்களுடைய சொந்த அனுசரணையோடு நடத்தி வருகின்றனர் இவர்களுக்கு ஆதரவாக ஜீவ ஊற்றின் தன்னார்வ தொண்டர்கள் இந்த நிகழ்ச்சி திட்டங்களை சிறந்த முறையில் நெறிப்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக இங்கே பயிற்சி பெற்ற பயனாளிகளை வினாவிய பொழுது...

"நாங்கள்பாடசாலை கல்வியை இடைநிறுத்தி விட்டு எமது வாழ்வாதாரத்திற்காக என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தோம்.

எங்களின் பலர் திருமணமானவர்கள் அவர்கள் தமது குடும்ப வறுமையை கருத்தில் கொண்டு ஏதாவது தொழிலை செய்ய வேண்டும் என்று ஏக்கத்தோடு காத்திருந்தவர்கள் .ஆனால் எங்களுக்கு அண்மையில் எந்த தொழில்களும் செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை .

ஆனால் ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் நிறுவனத்தின் அனுசரணையோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த தொழில் பயிற்சி கூடம் எங்களுக்கு மிகவும் ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கின்றது உண்மையில் இதை நாங்கள் ஒரு கடவுளின் வரமாக தான் பார்க்கின்றோம் எங்களுடைய பிரதேசத்தில் இருக்கின்ற பலர் இப்பொழுது தையல் தொழில்களில் தேர்ச்சி அடைந்திருக்கின்றனர்.

இப்படி இன்னும் பல்வேறுபட்ட தொழில் திட்டங்களில் பயிற்சிகளை பெற வேண்டும் என்று விரும்புகிறோம் அத்தோடு ஜீவமுற்று அன்பின் கரங்கள் நிறுவனம் ஆரம்பிக்கப் போகும் தொழில் கூடத்தில் நாங்கள் வேலை செய்ய முடியும் என்பதில் எங்களுக்கு இன்னும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

ஊருக்குள்ள இருந்து வீட்டையும் கவனித்துக் கொண்டு பணம் ஈட்டுவது என்பது உண்மையில் எங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான விடயம் தான் .இந்த மாற்றத்திற்காக ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் நிறுவனத்திற்கும், அளைளமைெ அயடை நிறுவனத்திற்கும் எங்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம் என்கின்றனர்."

இதன்மூலம் தொழில் வாய்ப்புக்கான நிலைத்தன்மை ஏற்படுவதுடன், குடும்பங்களின் பொருளாதார நிலைமையும் மேம்படுகின்றது. முதலாவது, தொழில் பயிற்சி நிலையங்கள் திறமையை வளர்க்கும் பொழுது, மக்கள் தங்களுக்கான திறமைக்கு ஏற்ப வேலை வாய்ப்புகளை பெற முடியும்.

குறிப்பாக இளைஞர்களுக்கு பொருளாதார சுயாதீனத்தை அடைய உதவும். வேலை வாய்ப்பு இல்லாமை காரணமாக வெளிநாடுகளுக்கு செல்லும் நிலையை இது மாற்றியமைக்கின்றது. இதனால், நாட்டின் பணம் வெளிநாட்டிற்குப் போவதைத் தடுத்து நாட்டின் பொருளாதார வளத்தைச் சிக்கனமாக வைத்திருக்க முடியும். இரண்டாவது, தொழில் பயிற்சி பெற்றவர்கள் தாங்களே தொழில் தொடங்குவதற்கும் உதவியாக இருக்கும். சொந்த தொழில்களைத் தொடங்குதல், குறிப்பாக சிறு தொழில் முயற்சிகள் தொடங்குதல் குடும்பத்திற்கான வருமானத்தை அதிகரிக்கும். இதன் மூலம், அவர்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு குடும்ப நலனில் முன்னேற்றத்தை அடைவார்கள்.

மூன்றாவது, தொழில் பயிற்சி நிலையங்கள் மூலம் பெண்கள் மற்றும் நெகிழ்ச்சியான சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கூட தங்களை முன்னேற்றிக் கொள்ளலாம். பெண்கள் கைத்தொழில், சிறு அளவிலான தொழில்கள், மற்றும் சுயதொழில் வாய்ப்புகளைப் பெறுவதன் மூலம் குடும்பத்தின் வருமானத்தை அதிகரிக்க முடியும். இது பெண் உரிமைகளை வலுப்படுத்துவதிலும் வழிவகுக்கும்.




நான்காவது, தொழில் பயிற்சி நிலையங்கள் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு திறமைகளை வளர்த்துத் தருவதன் மூலம் புறநகர வளர்ச்சிக்கும் உதவும்.

இத்தகைய பகுதிகளில் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், நகர பகுதிகளுக்கு மக்களின் இடம்பெயர்வை குறைக்கும். ஆனால், இத்தகைய தொழில் பயிற்சி நிலையங்கள் அனைவருக்கும் எளிதில் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும். இலங்கை அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து இதற்கான பயிற்சிகளை வழங்க, தொழில் திறன்களை மக்கள் பெற ஏதுவாகும். முடிவில், இலங்கையில் தொழில் பயிற்சி நிலையங்களை உருவாக்குவது குடும்பங்களின் பொருளாதார சிக்கல்களை தீர்க்கும் தீர்வாகும். இது தனிநபர்களின் திறனை மேம்படுத்துவதோடு, குடும்பங்களின் பொருளாதார நிலைத்தன்மையை உறுதிப்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

# 2025 இல் வாகனங்களைப் பெருமளவில் இறக்குமதி செய்யப் போகும் இலங்கை அரசாங்கம்

**வணிக அல்லது சரக்கு போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனங்களின் இறக்குமதிக்கு டிசம்பர் 01 முதல் அனுமதி வழங்கப்படும். மூன்றாவது கட்டம் : தனியார் பயன்பாட்டுக்கான வாகனங்கள் (கார்கள், வேன்கள், விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள் போன்றவை உட்பட) இறக்குமதிக்கு 2025 பெப்ரவரி 01 முதல் அனுமதி வழங்கப்படும்**



திருவாதவூரான்

304 HS குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் மோட்டார் சாரா வாகன உதிரிப் பாகங்கள் இறக்குமதி மீதான தற்காலிக தடையை நீக்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) உடனான நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் (EFF) வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மீட்பு செயல்முறைக்கு இணங்க, நிதி அமைச்சின் பரிந்துரைகளுக்கு உட்பட்டு, 2024 ஒக்டோபர் 01 முதல் மூன்று கட்டங்களாக இந்தத் தடை நீக்கப்படும்.

இந்நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு மீது ஏற்பட்டிருந்த அழுத்தத்தை முகாமைத்துவம் செய்ய 2020 மார்ச் மாதத்தில் முதன் முதலில் விதிக்கப்பட்ட இந்தத் தடை மூலம், மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை நிர்வகிப்பதற்காக இவ்வாறு அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டது.



எவ்வாறாயினும், பொருளாதார மீட்சி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சுற்றாடல் காரணிகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தடையை நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி, 304 HS குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் மோட்டார் சாரா வாகன உதிரிபாகங்களை இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரம் மூன்று கட்டங்களில் செய்யப்படும்.

- முதலாவது கட்டம் : பொதுப் பயணிகள் போக்குவரத்து வாகனங்கள், சிறப்பு நோக்க வாகனங்கள் மற்றும் பிற மோட்டார் சாரா வாகன உதிரிப் பாகங்களின் இறக்குமதிக்கு 2024 ஒக்டோபர் 01 முதல் அனுமதி வழங்கப்படும்.
- இரண்டாம் கட்டம்: வணிக அல்லது சரக்கு போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனங்களின் இறக்குமதிக்கு 2024 டிசம்பர் 01 முதல் அனுமதி வழங்கப்படும்.
- மூன்றாவது கட்டம் : தனியார் பயன்பாட்டுக்கான வாகனங்கள் (கார்கள், வேன்கள், விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள் போன்றவை உட்பட) இறக்குமதிக்கு 2025 பெப்ரவரி 01 முதல் அனுமதி வழங்கப்படும்.

விதிக்கப்பட்ட தடையை படிப்படியாக நீக்குவது மூலம், இந்நாட்டின் வாகன தொழில்துறைக்கு புத்துயிர் அளிப்பதோடு, பொருளாதாரத்தையும் மீட்டெடுக்க



எதிர்பார்க்கப்படுவதோடு, பழைய வாகனங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் எரிபொருள் செயற்றினின்மையைக் குறைத்தல் மற்றும் பராமரிப்புச் செலவு அதிகரிப்பைக் கட்டுப்படுத்துதல் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க இது உதவும் என்று அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறக்குமதி கட்டுப்பாடுகள் நீடிக்கப்பட்டதன் காரணமாக, இலங்கையில் தற்போது அதிகளவான பழைய வாகனங்கள் எஞ்சியிருப்பதுடன், எரிபொருள் செயற்றினின்மை காரணமாக வீதி பாதுகாப்பு மற்றும் அதன் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புகள் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. வாகன இறக்குமதி சம்பிரதாயமாக முக்கிய வருமான ஆதாரமாக உள்ளதனால், புதிய வாகன இறக்குமதியை அனுமதிப்பதன் ஊடாக பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அரச வருமானத்தை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், வாகன இறக்குமதியானது நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அந்த நிலைமையை முகாமைத்துவம் செய்ய வாகன இறக்குமதிக்கு மேலதிக சுங்க வரி விதித்தல் போன்ற நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையும் கையெழுத்திட்டுள்ள பெரிஸ் சாசனத்தில் உள்ளடங்கிய 'தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை (NDCs)' பூர்த்தி செய்வதற்கான தற்போதைய அர்ப்பணிப்பும், 2050 ஆம் ஆண்டுக்குள் 'பூச்சிய உமிழ்வு நிலையை' அடைவதற்கான தற்போதைய இலக்கும், இந்த முடிவை எடுப்பதில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. புதிய வாகன இறக்குமதிக் கொள்கையின் மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, Euro 4 முதல் Euro 6 வரையிலான தரநிலைக்கு மாறுவதன் மூலம் வாயு உமிழ்வு தரநிலைகளுக்கு இணங்குவதும் அவசியமாகும்.

இதன் மூலம் மின்சக்தி வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதையும் அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2029 ஆம் ஆண்டளவில், பெற்றோல் அல்லது டீசலில் இயங்கும் முச்சக்கர வண்டிகளை இறக்குமதி செய்வது தடைசெய்து, தற்போதுள்ள வாகனங்களை மின்சார வாகனங்களாக மாற்றுவதும் ஊக்குவிக்கப்படும். இந்நாட்டில் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 30,087 வீதி விபத்துக்கள் (முதன்மையாக மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள்) ஏற்படுவதுடன், அவற்றைக் குறைக்கும் முயற்சியில் அரசாங்கத்தின் வாகன இறக்குமதிக் கொள்கைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த புதிய கட்டமைப்பின் கீழ், வாகன இறக்குமதி புதிய மாதிரிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதாவது, உற்பத்தி செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு குறைந்த மற்றும் விளையாட்டு சார்ந்த வாகனங்கள் (SUVs) போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு குறைந்த பொதுப் போக்குவரத்து மற்றும் வர்த்தக செயற்பாட்டு வாகனங்களுக்கான தடை நீக்கப்படும்.

மேலும், சிறப்பு செயல்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் பத்து ஆண்டுகள் வரை பழமையானதாக இருக்கலாம். மேலும், இறக்குமதியாளர்கள் இந்த வாகனங்களை இறக்குமதி செய்த 90 நாட்களுக்குள் பதிவு செய்து விற்பனை செய்ய வேண்டும் மற்றும் தாமதத்திற்கு அபராதம் விதிக்கப்படும். மேலும், வாகன மற்றும் உதிரிப் பாகங்கள் இறக்குமதி செய்பவர்கள், வாகன ஒன்றிணைப்பாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஒழுங்குபடுத்துவதற்காக வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்கும் முறையும் அறிமுகப்படுத்தப்படும்.

இலங்கை, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கை அடைய வேண்டிய நிதி இலக்குகளுக்கு ஆதரவு வழங்கி, படிப்படியாக இறக்குமதியை மீண்டும் தொடங்குதல் மற்றும் சுங்க வரி மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டவும் எதிர்பார்க்கப்படுகிறது.



# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்





இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.11.2024இல் வெளியிடப்பெற்றது.